
# தெ[illegible]

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

காலயுக்தி வைகாசி – 'மே 1978'





விலை 1/-

SIRUL KADHEVI & CO

4, 43, 2nd Cross Street,

COLOMBO - 11

Publishe l by
YONG CENTRALITES CLUB

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

# தென்றல்

பருவம் 1 காலயுத்தி வைகாசி 'மே 1978' வசந்தம் 5


- ★ பேனா பேசுகிறது
- ★ குறுக்கெழுத்துப் போட்டி
- ★ ஐயம் திரிபுற
- ★ வரலாற்று நாயகன்
- ★ அறிவை ஆராயுங்கள்
- ★ கலைப்பூங்கா

**கட்டுரை:**

- ★ கோவூர் என்ன சொல்கிறார்
- ★ குருதிச் சோதிப்பும் நோய் அறிகுறிகளும்
- ★ மத்திய கிழக்குப் பிரச்சனை

**கவிதை:**

- ★ தடுக்கும் பேதமை
- ★ நாற்காலிகள்

**சிறுகதை:**

- ★ புலிகளின் பசுத்தோல்கள்
- ★ இவளும் ஒரு பெண்தான்

**நெடுங் கதை:**

- ★ சந்தேகத்துளி


ஆசிரியர், வெளியீட்டாளர்: ருத்ரா

உதவி ஆசிரியர்கள்: எஸ். வரதராஜா, எஸ். ரஞ்சித், கே. சர்வானந்தா

முகவரி: "தென்றல்" 49, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு:

செட்டியார் அச்சகம், 432, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கதை, கட்டுரை முதலியவற்றில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே!
ஆக்கங்களுக்கு அவற்றை ஆக்கியவர்களே பொறுப்பாளர்கள்.



# ஒருகேஷரின் முணுமுணுப்பு

செய்தி:

சிறுபான்மையரின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசு பல உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

— லலித் அத்துலத் முதலி

.........அவ்வாருயின் இவ்வளவு நாட்களும் மேற்கொண்டது.........

ஃ ஃ ஃ ஃ ஃ

செய்தி:

தமிழீழ விடுதலைப் புலிப்படையைக் கட்டுப்படுத்த இந்தியப் பொலிசாரின் உதவி கோரப்பட்டுள்ளது.

..........கூட்டுத் தேடுதல் முயற்சி என்ருலும் எம்மவருக்கும் சமமான வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.........

ஃ ஃ ஃ ஃ ஃ

செய்தி:

முருங்கன் கொலை சந்தேக நபர்களைப்பற்றித் தகவல் தருவோருக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம்.

.........இதென்ன சுவீப் ரிக்கற்றுக்குப் போட்டியான திட்டமோ......

ஃ ஃ ஃ ஃ ஃ

செய்தி:

சர்க்காரியா கமிஷன் அறிக்கையைச் சந்திக்க கருணாநிதி தயாராகி வருகின்றுர்.

# பேனு பேசுகின்றது......

பத்திரிகையாளரும் பத்திரிகை ஊழியருமான நால்வருக்குப் பாகிஸ்தானில் கசையடி வழங்கப்பட்டது. உண்ணுவிரதப் போராட்டம் நடத்தியதற்காக இராணுவ நீதிமன்றம் ஒன்று இவர்களுக்கு இத்தண்டனையை வழங்கியது. கசையடி வழங்கப்பட்ட போதும் இவர்கள் 'பத்திரிகைச் சுதந்திரம் நீடுழி வாழ்க" என கோஷித்ததாகப் பாகிஸ்தான் பத்திரிகையாளர் சம்மேளனம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் உண்ணுவிரதம் இருந்தவர்கள் மீது மிகவும் அநாகரிகமான முறையில் பகிரங்கக் கசையடி வழங்கிய தன் மூலம் தனிமனித சுந்திரத்திற்குப் பாதுகாப்பு அரணுக விளங்கவேண்டிய நீதிமன்றமே அதனைப் பாதாளச் சிறையில் போட்டு பூட்டிவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

மேலே கூறப்பட்ட செய்தி உலகெங்கும் வாழும் ஜனநாயகத்தில், தனிமனித சுதந்திரத்தில், கருத்துச் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவருக்கும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணும் அதே வேளையில் கசையடி பட்ட நேரத்திலும் அவர்கள் காட்டிய சுதந்திர உணர்ச்சி நிச்சயம் மெய்சிலிர்க்க வைக்கும் என்பதிலும் எவ்வித ஐயமில்லை.

"இடிப்பாரை இல்லா ஏமாற மன்னன் கெடுப்பாரின்றிக் கெடும்" என வள்ளுவன் வகுத்த அரசியல் நெறிக்கொப்ப எந்தவொரு நாட்டிலும் ஆட்சி நன்ருக அமைந்திட - ஜனநாயக ரதம் சீராக ஒடிட - எதிர்க்கட்சிப் பத்திரிகைகளின் பங்கு இன்றியமையாதது. அதிலும் ஜனநாயக ஆட்சி நிலவாமல் - மக்களின் 'நன்மைக்'காக - 'முன்னேற்றத்திற்'காக - மக்களேக்காக்க அவதாரம் எடுத்த புருஷர்களெனத் தம்மைக் கூறிக் கொள்ளும் இராணுவ ஆட்சியாளர்களால் ஆளப்படும் நாடுகளின் பத்திரிகைகள் ஆற்ற வேண்டிய பங்கோ ஏராளம்! ஏராளம்!!

அரசின் கொள்கைகள் - தீர்மானங்கள்மீது மக்களின் கருத்துகளைப் பிரதிபலிப்பது பத்திரிகைகள் ஆகும். பல புதுப்புதுக் கருத்துக்களை கூறி அதன் மூலம் பல புதுப்புதுப் பாதைகளுக்கு

வழிசமைத்துக் கொடுத்திடும் பணியில் பத்திரிகைகளே முன்னிற்கின்றன. ''எங்கே அறிவு தடையின்றி செயற்படுகின்றதோ அங்கே என் நாடு விழித்தெழுதலாக'' என்ற தாகூரின் வரிகளுக்கு உயிர் கொடுக்க வேண்டிய பெரும்பணி பத்திரிகைகளைச் சார்ந்ததாகும்.

இவை யாவற்றிலும் மேலாக பத்திரிகா ஆசிரியன் மக்களின் விருப்பத்தையோ அன்றி அரசின் விருப்பத்தையோ மறுபதிப்பு செய்யாமல் மக்கள் விரும்ப வேண்டியதையோ அன்றி அரசு செய்ய வேண்டியதையோ தைரியமாக எழுதக்கூடியவனாக இருக்க வேண்டும். தட்டிக்கொடுக்க வரும் அதே சமயத்தில் தட்டிக் கேட்பதற்கும் பின்வாங்காமல் இருக்க வேண்டும்.

ஆயினும் பத்திரிகைகள் பிற்போக்குவாதம், இனவாதம் போன்றவற்றின் ஊதுகுழலாக மாறிவிடுகின்றன என்று பட்டம் சூட்டப்பட்டுப் பல நாடுகளில் அவற்றிற்கு வாய்ப்பூட்டுப் போடப் பட்டு விடுகின்றன. ஆயினும் பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் இதற்கு ஒருபடி மேலே சென்று பகிரங்கக் கசையடி வழங்கியதன் மூலம் ஒரு புதிய "சாதனை"யை ஏற்படுத்தி விட்டது.

''நீ கூறுவதைக் கேட்க நான் விரும்பவில்லை; வெறுக்கின்றேன். ஆனால் உன் அபிப்பிராயத்தைக் கூறும் உரிமை உனக்கு உண்டு என்பதை வற்புறுத்த என் உயிரைக் கொடுத்தும் போராடுவேன்'' என்ற பிரிட்டிஷ் சிந்தனையாளனின் வரிகளைப் பாகிஸ்தான் அரசுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

— "ருத்ரா"

---

## இடி இடித்தால்....

மழைபெய்யும்போது இடியினால் பயிருக்கு நன்மையே உண்டாகின்றது. இடி உண்டாகும் பிரதேசத்தில் உள்ள பயிர்கள் முக்கியமாகக் கோதுமை, பார்லி, சோளம் போன்றவை மிக அதிகமாக விளைச்சலைத்தருகின்றன. அதுமட்டுமில்லாமல் இருபது முதல் இருபத்தைந்து நாட்கள்வரை முன்னதாகவே அறுவடை செய்யக் கூடிய பக்குவத்தை அடைகின்றது. இடி உண்டாகும்போது ஏற்படுகின்ற மின்காந்தமே இவற்றிற்குக் காரணம். இதை ரஷ்யர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆதாரம்: சோவியத்யூனியன்

தொண்டுகள் மடிவதில்லை

# வரலாற்று நாயகன்

—வண்ணை ஆனந்தன்

ஆற்றொழுக்கு நடையில் பேசும் அமுதப் பேச்சாளரா அவர்?

— இல்லை அவர் பேசினால் என்ன வென்றே பக்கத்தில் இருப்பவனுக்கும் கேட்காது! ஆனால் அவையில் அப்போது இருக்கும் அமைதி வேறெப்போதும் இருப்பதில்லை.

அரிமா நடையென்பார்களே அத்தகை வீர நடையில் உலவினரா?

— இல்லை, ஒரு அடி எடுத்து மறு அடி எடுப்பதற்குள் முகம்குப்புற விழுந்து விடுவாரோ என்ற பயம் பார்ப்பவர்கட்கு ஏற்படும்! ஆனால் நாடே அவர்பின் கண்ணைக் கட்டிக் கொண்டு நடந்தது.

உலகில் இனங்கண்ட பெரும் எழுத்தாளரா அவர்?

— இல்லை. அவர் எழுதுகோல் பிடித்தெழுத ஆரம்பித்தால், குழந்தைகளின் கிறுக்கல் ஓவியம் போலிருக்கும்! ஆனால் அக்கையெழுத்துத் தான் தமிழினத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் ஆற்றல் பெற்றதாக உலகே நம்பிக்கை கொண்டிருந்தது.

உடல் வலிமைமிக்க ஒரு பெரும் போர் வீரரா அவர்?

இல்லை — அடிக்கும் காற்றில் முறிந்து வீழுந்துவிடும் கொடி போன்ற உடலமைப்பு அவரது! ஆனால் 40 லட்சம் மக்கள் வெள்ளம் அவரில் தான் ஆண்மையைக் கண்டது.

உதிரும் சொல்லில் சத்தியம் ஒலித்ததால் அவரே புகழ் பெற்ற பேச்சாளரானர்!

தளர்ந்த நடையானாலும் தளராத பயணம் செய்தது அவரது கால்கள். தமிழீழ மண்ணில் அவர் பாதம் படாத இடமேயில்லை. பாத யாத்திரையால் சேவையாத்திரை செய்த கால்கள் அவரது. இதனால் நாடே அவர்பின் நம்பிக்கையுடன் சென்று கொண்டிருந்தது!

கிறுக்கல் எழுத்துத்தான். அதனுள் தீர்க்க தரிசனமும், நிதானமும், தர்மமும், என்றுமே குடிபுகுந்திருந்தனவே! இதனால் அந்தக் கையெழுத்து தமிழினத்தின் தலையெழுத்தை நிர்ணயித்தது!

காடையரால் காலிமுகத்திடலில் தாக்கப்பட்டு பசும்புற்றரையை தன் செந்நீரால் செந்நிறமாக்கியதுடன் பெற்றெடுத்த மைந்தன் கண்ணெதிரே தாக்கப்படுவதைக் கண்டபின்னும், தளரா உறுதியுடன் இது சத்தியப்போர் என அமைதிகாத்து ஆண்மைக்கு இலக்கணம் வகுத்த வீரரவர். இதனாலன்றோ 40 லட்சம் மக்கள் வெள்

ளம் அவரில் ஆண்மையைக் கண்டது!

காந்தி கடைப்பிடித்து பின் புத்தகமானது காந்தீயம். அதைக் குறளாக, பைபிளாக, குரானக படிக்கமுடிகின்றது, எம்மால், அதில் ஒருவரியைத்தானும் கடைப்பிடிக்க முடிவதில்லே. எமது ஆற்றாமையை - தோல்வியை, ஏற்றுக்கொள்ள முடியாத பேடித்தனத்தால் "காந்தி தெய்வீக மனிதர், அவர் செய்ததெல்லாம் எம்மாலாகக்கூடியதா" - எனக்கூறித் தப்பிவிடுகின்ருேம். ஆனல் அது மானுடநெறியென ஏற்று அதன் வழி ஒழுகிய சத்திய சீலரை அவரில்தான் கண்டோம். இதனல் கரை தெரியாது கலங்கி நின்ற கலத்துக்கு ஒளிகாட்டும் கலங்கரை விளக்கம்போல் தமிழினத்தின் காவல்தெய்வமானுர் அவர். பொக்கு வாய்க்காந்தியின் சிரிப்பை காங்கேசன்துறைக்கிழவனில் கண்டோம்.

அவர் தனிமனிதனல்ல — தமிழின வரலாறே அவர்தான். பொது வாழ்வில் அவர் 30 ஆண்டுகள் இருந்திருக்கின்ருர். இந்த 30 ஆண்டுகள், சத்தியமும் தர்மமும் தமிழினத்தை ஆட்சிசெய்தகாலம். இந்த 30 ஆண்டுகளாக அவராற்றிய தொண்டுக்கு அதற்குமுந்தைய 50 ஆண்டுகளாக தன் சொந்த வாழ்வில் அவர் கடைப்பிடித்த அன்பு நெறியே மூலதனமெனில் அது மிகையல்ல. எனவேதான் அவரது 30 ஆண்டுப் பொது வாழ்வு முறையாக எழுதப்படும்போது தமிழ்த் தேசிய இனத்தின் 30 ஆண்டுகால வரலாறு எழுதப்படுகின்றது எனக்கூறப்படும்.

உலகம் பல தலைவர்களை பெற்றிருக்கின்றது. ஆனல் அப் பல தலைவர்களும் ஒரு தலைவனை இவரில் தான் கண்டார்கள். தாழ்ந்த தமிழினம் மீண்டும் மிதந்திட மிதப்புக் கட்டையாக, தறிகெட்ட ஆட்டுக் கூட்டத்தினிடை தோன்றிய மேய்ப்பாளுக அவர் விளங்கினுர். சாதி வெறியும் - சமயப் பற்றும் மேலோங்கி நின்ற அந்த காலகட்டத்தில், அசல் கிறீஸ்தவனுன இவர் நூறுவீதம் இந்துக்கள் வாழும் தொகுதியுள் புகுந்து 'நான் தான் செல்வநாயகம்...' எனத் தன்னைத் தானே அறிமுகப்படுத்தி நம்பிக்கையுடன் தேசிய இனத்துக்கு நம்பிக்கையூட்ட அவராரம்பித்த அந்தக் காலம் வரட்சி பொருந்திய தமிழின வரலாற்றுப் பூமியில் குளிர் நீர் பாய்ந்துவர ஆரம்பித்த காலமல்லவோ?

தீண்டாமையெனும் போது அது தீமைபயப்பது என்பதை எடுத்துக்காட்டவோ என்னவோ தீண்டாமை என்னும் சொல்லிலேயே மூதலெழுத்தையும் முடிவெழுத்தையும் சேர்க்க தீமை வருகின்றது. அதை உணர்ந்த பெரியவர் தீண்டாமைக் கெதிராகப் போர்க்கொடி மட்டுமல்ல, செயலிலும் அதை ஒழிக்க இயக்கங்களை நடத்திய சீர்திருத்தவாதி.

யாழ்ப்பாணத்தான் - மட்டக்களப்பான் - வன்னியான் என்ற பிரதேச உணர்வால் பிளவுபட்டிருந்த செந்தமிழர் வாழ்வில் ஒற்

றுமைப் பாலத்தை அமைத்த பொறியியலாளரும் அவரே.

'அயோக்கியரின் இறுதிப் புகலிடம் அரசியல்' என்ற அறிஞர் பெனுட்ஷோவின் கூற்றை பொய்ப்பித்துக் காட்டிய சத்தியததின் - சரித்திரத்தின் நாயகர் அவர். அவர் நாவசைந்தால் அது தான் தமிழினத்தின் முடிவு என்பதையும், அது எக்காலத்திலும் என்ன விலை கொடுத்தாலும், மாற்றப்பட முடியாத முடிவு என்பதையும் சிங்கள அரசியல் வாதிகளும் ஏற்றுக் கொண்டனரே. 'கௌரவ காங்கேசன்துறைப் பிரதிநிதி அவர்களுடன் கருத்து வேறுபாடுகளிருப்பினும் அவர் ஒன்றை சொன்னுல் அது உண்மையான மாற்றப்படாத முடிவு என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்' - என பல தடவைகள் சிங்கள அரசியல் வாதிகள் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றனரே! அதிகமேன்? மெதுமையான குரலில், ஆனுல் உறுதியான குரலில் தமிழீழத்தை பிரேரித்து அவர் நாடாளுமன்றத்தில் பேசியதும் அன்றைய நிதி அமைச்சர் பீலிக்ஸ் பண்டாரநாயக்கா துடி துடித்து, 'இது யுத்தப் பிரகடனம் போலல்லவா இருக்கின்றது' என்று கூறியது சத்தியத்தின் குரல் ஏற்படுத்திய தாக்கமல்லவா?

இன்று எங்கே அந்த வரலாற்று நாயகன்! அமுதப் புன்னகையில் சாந்ததேன் மலர் காட்டி, இமை மலர் விழியில் தூய இதயத்தின் ஒளி காட்டி, அமைதிப் பொன்மொழியில் தீர்க்க தரிசனம் காட்டி, குமுதப் பொன்முகத்தில் அன்புப் பண்பை காட்டி, நம்மையெல்லாம் விழிக்க வைத்த தலைமகன் விழிமலர் மூடிவிட்டானே!

ஆனுலும் அவன் வகுத்த நெறியும் அவன் போதித்த ஆண்மையும் எம்மை வழிநடத்துகின்றன.

அண்ணலவன் வாய் மலர இருந்து உதிர்ந்த இறுதிக்கால சத்திய வாக்குகள் காதுகளில் ரீங்காரமிடுகின்றனவே.

'Here, I speak as the mouth piece of the tamil people, and I give notice to every body that we shall carryone Campaign to create a Seperate Tamil state (பாராளுமன்றத்தில்)

அண்ணலின் இறுதிக் காலங்களில் சட்டக்கல்லூரி செய்த தவப் பயனுல் அவர் சட்டக்கல்லூரி தமிழ் மன்ற உதயசூரியனில் பின்வருமாறு கூறியுள்ளார்:-

"தமிழினத்தின் விடுதலை என் ஜீவிய காலத்துள் கைகூடிவிடும் என நம்புகின்றேன். தற்செயலாக என் காலத்துள் கைகூடாதுபோனுல் வாலிபர்களாகிய நீங்கள் தொடர்ந்து போராடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த உணர்வுடன் கண்மூடுவேன் (10-9-76) இதுவே தந்தை சட்டக்கல்லூரி மாணவருக்கு தந்த தாரகமந்திரம்.

நாயகன் கண்மூடினுலும் தொடர்ந்து போராடுவோம். தமிழ் ஈழத்தை அன்னவன் பாதமலரில் காணிக்கை யாக்குவோம்.

# புலிகளின் பசுத்தோல்கள்

— காவலூர் எஸ். ஜெகநாதன்

நிலத்தை மண்டிக்கிடந்த க்ருக்கல் இன்னமும் வெளிக்கவில்லை. புள்ளினங்கள்கூடத் துயில்கலையாத அந்த விடிந்தும் விடியாத 'இரண்டும் கெட்ட' நேரத்தில் அச்சகத்தைத் திறப்பதற்காக காரில் வந்து இறங்கினார் சுப்பிரமணியம். அச்சகத்தில் அவருக்கு நிரம்ப வேலை இருந்தது. அன்று மாலை நடக்கவிருக்கும் சைவ மகாநாடொன்றின் அமைப்பாளர் அவர்தான். நோட்டிஸ் அடித்து விநியோகிப்பதிலிருந்து மாநாட்டுக்குத் தலைமை தாங்குவது... சிறப்புச் சொற்பொழிவு... அது, இதென்று எல்லாமே அவர்தான். கண்டியில் பிரபலமான அச்சகமொன்றின் முதலாளியான அவரிடம் ஏழை எழுத்தாளர்களிடம் 'வறுத்தெடுத்த' பணம் தாராளமாகவே புரண்டது. காரை வீதியின் ஓரமாக நிறுத்திவிட்டு அச்சகத்தை திறக்கப்போனவரின் பார்வையில் 'பேவ்மன்ற்'றில் ஒதுங்கிக்கிடந்த உருவம் பட்டுவிட்டது.

கிழிந்த துணிதுண்டால் தன் மானத்தை மறைக்க சிரமப்பட்டுக்கொண்டிருந்தாள் கிழவி. அழுக்கான அவள் அலங்கோலம் சுப்பிரமணியத்தின் வயிற்றை 'அலைய' வைத்தது. "ஏய் கிழவி..." என்று உறுமியபடியே கதவைத் திறந்தார். கிழவி நிமிர்ந்து பார்த்தாள். "இனிமேல் இதிலை படுக்கப்படாது. சொல்லிப்போட்டன்" என்று கூறி அவளை விரட்டிவிட்டு அச்சகத்துள் நுழைந்தார். பெரிய பெரிய "சைஸ்"களில் அவருடைய போட்டோவுடன் சேர்த்து அச்சிடப்பட்ட 'நோட்டிஸ்'களை அடுக்கினார். எல்லாவற்றையும் ஒழுங்காக்கிக்கொண்டு சுப்பிரமணியம் புறப்பட்டபோது ஆதவன் வானில் மிதக்கத் தொடங்கிவிட்டான்.

நோட்டீசும் கையுமாக புடவைக்கடையொன்றுள் அவர் நுழைந்தபோது கேள்விக்குறியாக வளைந்து கும்பிட்டு வரவேற்றார் முதலாளி. "பெரியார் உங்களாலை தான் சைவம் வாழுது... நாவலருக்குப் பிறகு நீங்கதான்" என்று முதலாளி கூறியபோது உண்மையிலேயே சுப்பிரமணியத்துக்கு பெருமை பிடிபடவில்லை. கண்டியில் உள்ள கடைப்பகுதி முழுவதும் வேட்டி நிலத்தைக் கூட்ட அலைந்து திரிந்தார். எதிர்ப்பட்டவர்களின் 'கும்பிடுகள்' "பெரியார்" என்ற வாஞ்சையான அழைப்புகள் கக்கத்துக்குள் நோட்டிஸ் கட்டையும் வைத்துக்கொண்டு எதிர்ப்பட்டவர்களில் 'பெரிய' தலைகளுக்கு கரம் குவிப்பது சிறியதுகளுக்கு தலையசைப்பதுமாக வேர்த்து விறுவிறுக்க அலைந்து திரிந்தார் சுப்பிரமணியம். பெற்றோலை மிச்சம் பிடித்து அவருக்

காக அச்சகத்துக்கு மூன்னல் கார் காத்துக் கிடந்தது.

அன்றுமாலே நடந்த சைவ மகா நாட்டில் கதாநாயகன் சுப்பிரமணியம்தான், அங்கு பேசியவர்கள் எல்லோரும் பரம்பொருளின் பெருங் கருணைகளைவிட 'பெரியார்' சுப்பிரமணியத்தின் அருமைபெருமைகளைத் தான் விளக்கினர்கள். இடுப்பிலிருந்து நழுவமுயலும் பட்டு வேட்டியை அடிக்கடி இழுத்துவிட்டுக் கொண்டவராக தங்கச் சங்கிலி நெஞ்சில் புரண்டுகொண்டிருக்க விபூதி, சந்தனம்... உருத்திராட்சம் சகிதமாக் சைவப்பழம்போல் அங்கு மிங்கும் காரணமின்றியே ஓடினர். ஆண்டவனே மறந்து அவரைத்தான் கவனித்துக்கொண்டிருந்தது பக்தர் கூட்டம். கச்சேரிகள், பிரசங்கங்கள் எல்லாம் முடிய அதிகாலே நாலு மணியாகிவிட்டது.

'பெரியார்' சுப்பிரமணியம் தன் புகழ்பரப்பும் சைவ மகா நாட்டை வெற்றிகரமாக முடித்துவிட்டு காரில் அச்சகத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தார். அச்சகத்தின் முன்னல் முதல்நாள் இரவு படுத்திருந்த கிழவி படுத்துக்கிடந்தால் விரட்டவேண்டும் என்ற ஆவேசம் அவர் மனதில் கிளர்ந்திருந்தது. காரை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கி அச்சகத்தை நோக்கி நடந்து வந்தார். அச்சகத்தின் முன்னல் படுத்திருக்கும் உருவம்? கிழவியல்ல என்பது பார்த்ததும் புரிந்தது.

கிழவியைப்போன்ற அதே அருவருப்பான கோலம்தான். ஆனலும் அவள் இளமையை உடற்கட்டு வெளிப்படுத்தியது. அருவருப்பான ஆபாசக் கவிதையைப் படிக்கும் போது உள்ளாக இருக்கும் மிருக உணர்வு விழித்துக் கொள்ளுமே அதுபோன்ற அருவருப்பில் பெரியாரின் முகம் சுழித்தபோதும் அவரது உடல் எதையோ கேட்டது. ஒற்றைக்கதவைத் திறந்துவிட்டு நிதானமிழந்து திரும்பிப்பார்த்தார். சேவலொன்றின் கூவல் ஆங்காரமாகவே அவர் செவிப்பறையில் மோதி விடிந்துவிட்டதை உணர்த்தியது. ஏமாற்றத்தில் மனம் குமைந்தவர் நாளேய இரவு அச்சகத்திலேயே தங்கிவிட நினைத்தவராக "ஏய் பிள்ளே நாளைக்கும் இங்கேயே படுத்திரு" என்ருர்.

சீற்றத்துடன் எழுந்தவள் கூறிக் கொண்டே நடந்தாள் "உன்ர முற்றத்திலே நாய்கூடப் படுக்காதடா"

[யாவும் கற்பனே]

## தயவுசெய்து என்னேக் குளிப்பாட்டுங்கள்!

ஐயோ! இதை நாங்கள் கேட்கவில்லே, இப்பொழுது யாழ்ப் பாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் C. T. B பஸ்கள் தான் கேட்கின்றன. அவற்றில் சிலவற்றில் இப்படியாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. என்ன செய்வது? தண்ணீர்த் தட்டுப்பாடு(?) பஸ்களின் சுகாதாரத்தைக்கூட விட்டுவைக்கவில்லேப்போலும்!

# கோவூர் என்ன சொல்கிறார்!
## [DR. KOVOOR ON HIMSELF]

தகவல்: சிவா. இராமச்சந்திரன்

உலகிலுள்ள எல்லோரையும் போலவே நானும் இவ்வுலகில் தோன்ற எனது பெற்றோரின் கண நேர உயிரியல் நடவடிக்கை ஒன்றே காரணமாயமைந்தது.

நான் எனது இளம் வயதில் ஒரு கிறிஸ்தவனாக இருந்தேன். இதற்கு ஒரு கிறிஸ்தவ இல்லத்தில் பிறந்து, கிறிஸ்தவ பெற்றோரினால் நான் வளர்க்கப்பட்டமையே காரணமாக வேண்டும். எம்மில் பலர் எமது பெற்றோரின் சமயத்தையே பின்பற்றுகின்றோம். ஏனெனில் இளம்பிராயமுதல் பெற்றோரின் போதனையில் வளர்கின்றோம்.

எனக்கு சுயமாக சிந்திக்கத்தக்க வயதும், அறிவும் வந்ததும் நான் கிறிஸ்தவத்தைவிட்டு விலகி பகுத்தறிவாளனாக மாறினேன். பைபிளை எல்லாம் அறிந்த இறைவனது வாக்காக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதேபோலவே எனது பிறபபிடமான கேரளத்தை விட்டும் விலகி இதற்கு சமஅழகுடைய இலங்கையை வாழ்வதற்கு தேர்ந்தேன். இலங்கையை தெரிவதற்கு அந்நாட்டு மக்களில் அநேகமானோர் கௌதம புத்தரின் சமயத்தை பின்பற்றுவதே காரணமாயமைந்தது. மற்றைய மத ஸ்தாபர்களைப்போலல்லாது கௌதம புத்தர் பகுத்தறிவுடன் சேர்த்து தமது சமய தத்துவத்தை போதித்தவர். எனக்கு இடமல்ல, மனித இனமே முக்கியமானது. இலங்கையில் எனக்கு நம்பிக்கையுள்ள அன்புள்ளம் கொண்ட மூன்று தலைமுறை மாணவர்கள் உள்ளனர். அங்கு நான் கல்வியறிவுள்ள அநேகமானோரால் அறியப்பட்டவன், அநேகமானோரின் நன்மதிப்புக்கும் ஒரு சிலரின் தூற்றுதலுக்கும் உட்பட்டிருப்பவன்.

எனக்கேற்ற வாழ்க்கைத் துணையை கண்டுபிடிப்பது எனக்கு கடினமாயிருந்தது. 50 வருடங்களுக்கு முன்னர் பகுத்தறிவு முறையான வாழ்க்கையை கைக்கொள்ளும் கிறிஸ்தவ பெண்ணை கண்டுபிடிப்பது இயலாதவொன்றாகும். ஆனால் அதிஷ்டவசமாக அத்தகையவளை திருவான்கூர் நீதிச்சேவை நீதிபதி திரு. K. M. இட்டி அவர்களின் மகளுருவில் கண்டேன். எனக்கு வாழ்க்கைத்துணையாக வரச் சம்மதித்த அவள் நான் விதித்த நிபந்தனையொன்றையும் ஏற்றுக்கொண்டாள். எமக்கு பிறக்கும் பிள்ளைகளை எந்தவொரு சமய போதனை ஆதிக்கத்திலும் வளர்ப்பதில்லை என்பதே அந் நிபந்தனையாகும்.

ஆனால் எந்தவித சமயபோதனை வீட்டில் அளிக்கப்படாதிருந்தும் எங்கள் மகன் கேம்பிரிட்ஜ் சீனியர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த வேளையில் ஒழுங்காக தேவாலயம் சென்று வந்தான். எனது மனைவி மகனது இந்த சமய ஆர்வத்தை கூறியபோது நான் அவனிடம் சமயத்தைதெரிவு செய்யும் அவனது போக்கில் குறுக்கிட வேண்டாம் எனப் பணித்தேன். ஆனால் அவனை தேவாலயத்தின்பால் ஈர்த்தது; சமயபற்றல்ல வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளே என்பதை ஈற்றில் தெரிந்துகொண்டேன்.

ஆதாரம்: 'Caravan' [Dec. 77]
தமிழாக்கம்: R. சிவகுமார்

விஞ்ஞான உலகம்:

# குருதிச்சோதிப்பும் நோய் அறிகுறிகளும்

— R. சிவகுமார்

எமது உடலை வைத்திய பரிசோதனைக்குட்படுத்துகையில் வைத்தியர் குருதி, சிறுநீர் என்பவற்றை சோதனை செய்கிறார்களே ஏன்? இவற்றின் சோதிப்புகளிலிருந்து அநேகமாக எமது உடலில் நடக்கும் எல்லா செய்முறைகள்பற்றிய பூரண அறிவை பெற முடியுமெனவும், இதனால் நோய்க்குரிய அறிகுறிகள் அறியப்படும் எனவும் வைத்தியர்கள் கூறுகின்றனர். இங்கு குருதிச்சோதிப்பு விளைவுகள் நோக்கப்படுகின்றது.

குருதிச் சோதிப்பில் முதலாவதாக C B C (Complete Blood Count) எனப்படும் சோதிப்பு செய்யப்படும். இதன்போது ஒருவித இரசாயனத் திரவத்துடன் குருதி கலக்கப்பட்டு ஐதாக்கப்படும். பல சதுரங்கள் கொண்ட (like graph paper) சோதிப்புக்கண்ணாடி (Slide) இல் இத்திரவம் வைக்கப்பட்டு நுணுக்குக்காட்டி மூலம் பார்வையிட்டு அரங்களில் காணப்படும் குருதிக் கலங்களின் (செங்கலம் அல்லது வெண்கலம்) எண்ணிக்கை அறியப்படும். இதன் பிரகாரம் பின்னர் ஒரு கனமில்லி மீற்றரில் காணப்படும் குருதிக் கலங்களின் எண்ணிக்கை அறியப்படும். சாதாரணவொரு சுகதேகிக்கு செங்கலங்களின் எண்ணிக்கை — 5 million / கன மில்லி மீற்றர்; வெண்கலங்களின் எண்ணிக்கை — 5,000 - 10,000 / கன மில்லி மீற்றர் ஆகும். மாறுபடும் எண்ணிக்கை நோய்களை அறிவுறுத்தும்.

குருதிக் கலங்களில் செங்குருதிக் கலமானது கலச்சுவாசத்திற்கு வேண்டிய ஒட்சிசனை அவற்றில் காணப்படும் ஈமோகுளோபின் எனப்படும் பதார்த்தத்தில் காவி உடல் முழுவதும் கொடுக்கின்றது. இவ் ஈமோகுளோபின் இரும்பைக் கொண்டுள்ளது. குருதியின் சிவப்பு நிறத்திற்கு ஒட்சிசன் காவும் ஈமோகுளோபினே காரணமாகும். எனவே C. B. C. மூலம் செங்கலங்களின் எண்ணிக்கை குறைவு என அறியப்படின் அல்லது குருதியின் சிவப்பு நிறம் குறைவுபடின் உடலின் ஒட்சிசன் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகும். இதனை வைத்தியர் காமாலை (anemia) என்னும் நோய்க்கு அறிகுறியாகக் கொள்வர். இக்காமாலை உணவில் இரும்புச் சத்து, விற்றமின்கள் குறைவினால் ஏற்படுகின்றது. இவை தவிர செங்கலங்களை தோற்றுவிக்கும், எலும்புகளின் மச்சைகள் அவற்றை உண்டாக்க வலிமையற்றனவாகும்போதும், குருதி இழப்பின்போதும் ஏற்படலாம். எனவே மறைமுகமான குருதி

இழப்பு நோய்களுக்கான உதாரண மாக குடற்புண் ( ulcer ) போன்ற வற்றிற்கான ஆராய்வுகளை வைத்தி யர் மேற்கொள்ள முடியும்.

*CBC* மூலம் செங்கல எண் ணிக்கை வழக்கத்திலும் கூடவென அறியப்படின் '*Polycythemia*' எனப் படும் நோய் உள்ளது என அறிய லாம். இந்நோய் செங்கலங்களின் எண்ணிக்கை குறைந்து வருகையில் அவற்றை அதிகமாக உற்பத்தி செய்ய உடல் முயன்று மேலதிக மாக அவை தோற்றுவிக்கப்படுவ தால் தோன்றுவது. இவை தவிர குருதிச் சோதிப்பின்போது செங் கலங்களின் வடிவங்கள் கொண்டும் நோய் அறிகுறிகள் பெறப்படும். உதாரணமாக வழக்கமான அளவி லும் பெரிய செங்கலங்கள் கடுங் காமாலையை அறிவுறுத்தும்.

அடுத்து வெண்கலங்களை நோக்கின், அவை உடலில் தோன் றும் பற்றீரியாக்கள் மற்றும் பிற உடலெதிரிகளை கொல்லும் தொழி லைச் செய்வன. வழக்கத்திலும் உயர்ந்த எண்ணிக்கை அறியப் டின்உடலின் அகத்தேயோ, பறபுத். தேயோ நோய்த் தொற்றுதல் உண்டு என அறியலாம். 15,000க்கு மேற்பட்ட எண்ணிக்கை அறியப் படின் Apprndicits அல்லது வேறும் மறைந்துள்ள நோய்க்கான அறிகுறி யாகும்.

குருதிமூலம், நூற்றுக்கணக்கான பதார்த்தங்கள் கடத்தப்படு இன்றன. சமிபாடடைந்த உணவு ஓமோன்சுரப்புகள், கனிப்பொருட் கள், நொதியங்கள், அனுசேபக் கழிவுகள் எனபன சிலவாகும். எனவே குருதிக்கொதிப்பில் இவை பற்றியும் அறியமுடியும் S. M. A. - 12 [Sequential Multipale Analyxer] எனப்படும் இயந்திர மூலம் சில நிமிடங்கள் நெறிக்குரிய 12 சோதனை களைச் செய்யமுடியும்.

கல்சியச் செறிவு :

கல்சியம் குருதியுறைதல் எலும் புண்டாதல், தசையைப்பதனுக வைத் திருத்தல், நரம்புகளின் தொழிற் பாடு என்பவற்றிற்கு உதவுகின்றது. குருதியில் கல்சியத்தின் செறிவு உயர்வாகவிருப்பின் புடைக்கேடயச் சுரபி (Para Thyroid) என்னும் சுரப்பியின் மேலதிக செயற்பாடு அல்லது எலும்புகளுக்கு புற்றுநோய் பரவியிருப்பதற்கான அறிகுறிக ளாகும். மார்பு புற்றுநோய் (Breast Cancer) க்கு குருதியில் உயர் செறி வில் கல்சியம் காணப்படுதல் ஒரு அறிகுறியாகும்.

குளுக்கோசு செறிவு :

குளுக்கோசு. யூறிக்கமிலம், கொலஸ்திரோல் பிலிருபின் (செங் கலங்கள் உடைக்கப்படுவதால் தோன்றும் பதார்த்தம்) என்பன மிகையாகக் காணப்படின் அது நீரி ழிவு (Diabetes) சிறுநீரக, ஈரல் நோய்களும், மாரடைப்பு (Heart-Attack) உண்டாவதற்குமான அறி குறிகளாகும்.

**B. U. N. (Blood Urea Nitrogen)**

அளவு:

உடலில் புரதம் உடைக்கப்பட்டு உண்டாகும் பொருட்கள். இவை

சிறுநீரின் பிரதான கூறுகளிற்சில குருதியில் இவற்றின் அளவு சிறுநீரகக் கோளாறுகளை எடுத்து விளக்கும்,

பொசுப்பெற்றேசு :

அமிலம் பொசுபேற்றேசுவின் உயர் அளவு முன்னிற்குஞ் சுரபிகள் (Prostate Gland) [ஆண் இனப் பெருக்க உறுப்பில் உள்ள ஒரு சுரபி] இல் ஏற்படும் புற்றுநோயை கூறி வுறுத்தும் பிரதான காரணியாகும். காரபொசுபேற்றேசுவின் அளவு வயதிக்கேற்ப வேறுபடும் ஆனல் கூடியளவு காணப்படின் 'Cirrhosis' மற்றும் ஈரல் நோய்கள், எலும்பு நோய்களுக்குரிய அறிகுறியாகும்.

இவ்வாறு ஒரு துளி இரத்தம் நமது உடல் நிலை பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கின்றது.

ஆதாரம் : Family Health

---

## மாணவர் சிந்தனைக்கு !

மின்சாரம் என்பது சக்தியின் ஒரு தோற்றம். மின்சாரம் என்பது இலத்திரனேற் எனப்படும் மிகமிகச் சிறிய நிறைகொண்ட துகள்களின் தொடர்ச்சியான விரைவான இயக்கம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே மிக வேகமாக இயங்கும் மிகச்சிறிய துகள்கள் எல்லாம் சக்தியை (மின்சாரம்) தோற்றுவிக்க முடியுமா? இது எப்படிச் சாத்தியமாகும்? விளக்குங்கள் பார்க்கலாம்.


● கென்லி சேட் வகைகள்

● வெலோஞ் பெனியன்கள்

● டியூரோ சேட் வகைகளின்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

# த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்

42, 44, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7034

# இவளும் ஒரு பெண்தான்

— எஸ். குமார். ஜோதிபாலா

அன்று ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு.

நில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாண மாநகரம். கணத்திற்கொரு வாகனங்கள் தோன்றுவதும் மறைவதுமான காட்சிகள். தர்ம ஆஸ்பத்திரியில் இல்லாத மருந்துகளை விற்கும் பாமஸிக்கள், டிஸ்பென்சரிகள், பெட்டிகளில் கோபுரமாய் அடுக்கப்பட்ட தோடம்பழக்கடைகள், கடலைக்காரி, நெல்லிக்காய் விற்கும் சிறுவன்.

ஒரு பெண்; இரண்டரை அங்குல விட்டங்கொண்ட சோடாப் புட்டிக் கண்ணாடி, மூன்றங்குல 'ஹீல்ஸ்' வைத்த செருப்பு, அழகிய நீண்ட 'பெல்பாட்டம்', மதர்த்துக் குலைதள்ளிய மேலங்கங்களின் கவர்ச்சிக்கு எழிலூட்டும் 'ரீசேட்', கையிலே 'கான்பாக்' பெரியது, ஒயிலானது, அவளது சிரிப்பு அழகானது. அதற்காகவே தோடம் பழக் கடைக்காரன் எண்பது சதப் பழங்களை ஐம்பது சதமாகக் கொடுக்கலாம்.

இரண்டு பழங்களை கையில் எடுத்துக் கொண்டு அதற்குரிய பணத்தை தோடம்பழக்காரனிடம் அவள் கொடுத்தாள். ஆஸ்பத்திரிப் பக்கமாக அவள் நடையைத் திருப்பி இருப்பாள்; ஒருகணம் கண்களால் சுற்றிப்பார்க்கிறேன். இயங்கிக் கொண்டிருந்த நகரமே அந்தக்கணம் நின்றுவிட்டாற்போல ஒவ்வொரு வரும் ஆளுக்கொரு மன அவலங்களோடு ஆஸ்பத்திரி வாசலால் அவள் சென்று மறையும் வரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்னுடைய கண்ணாடியை மூக்குக்கு மேலே உயர்த்திவிட்டு ஐந்து நிமிடத்தில் வருகின்றேனென்று ஆஸ்பத்திரிக்குள் சென்ற நண்பனை மனதிற்குள் திட்டிக்கொள்ளுகின்றேன். இடது கரத்தை உயர்த்திப் பார்க்கின்றேன். பன்னிரண்டு பத்து. பசி கொட்டாவியாக வந்து கட்டியம் கூறிப் போயிற்று. முன் கண்ணாடியில் முகத்தைச் சுழித்துப் பார்த்து அழகுபடுத்திக் கொள்ளுகிறேன். கண்களை பக்கத்துக் காட்சிகளின் மேல் படர விடலானேன்.

என் காருக்கு நேராகவே ஒரு உருவம் அவ்வளவு நேரமும் எனது கண்களுக்குள் அகப்படாது முன்னாலேயே இருக்கும் அந்த உருவத்தை ஒரு பாலுக்குள் அடக்கி விடுவது வெகுகஷ்டம். அதுவென்பதா? அவன் என்பதா? அந்த உருவத்திற்குப் பொருத்தமான பால் எது? அவள்தான் ஏனென்றால்,

அவளுக்கு முன்னால் ஒரு சிறிய அவளுக்குச் சொந்தமான அவன் இயங்கிக் கொண்டிருந்தான்.

அவனை இனங்காணுவது இலகுதான். இரண்டரை அடி உயரம் தான் இருப்பான். அவனது தோற்றம் உதாரணம் காட்டிட முடியாத தனித்துவமானது. அவளும் தான் குள்ளமானவள் ஒட்டிய உதடுகள், உட்குழிந்த விழிகள். ஒரு நைந்து பிய்ந்த கந்தலொன்று அவளின் மேல்பாகத்தை மூடியிருந்தது. அது எப்பவோ சிவப்பு வர்ணமாக இருந்திருக்கவேண்டும் என்பதற்கான ஒரு சில சான்றுகள். கீழ்ப்பாகம் உக்கிக் கிழிந்த ஒரு துண்டு, அவள் தனது அந்தரங்கங்களை மறைக்க படும் அவஸ்தையை அவளது கைகள் அடிக்கடி இழுத்து இழுத்து கந்தலோடு மல்லாடுவதிலிருந்து கண்டு கொள்ளமுடியும்.

அவளுக்கென்று ஒரு சுயாதீனம்? ஆச்சரியமானதுதான். ஏதோ ஒரு கடையில் கொஞ்சம் குழம்பும் ஒரு துண்டுப் பாணும் (ரொட்டி) வாங்கிவிட்டாள்போலும் பாணைத் தனது குச்சிக் கைகளினால் பதபாகமாகப் பிய்த்து சிரட்டைக் குழம்பினுள் தொட்டு மெதுவாக தனது வாய்க்குள் வைக்கின்றாள். வீணீர் வழிகின்றது. அவளுடைய கண்கள் இயங்குகின்றன. ஆனால் அவைகளில் புறக் காட்சிகளுக்கு உரித்தான தாக்கம்! ...ம்கு... ஏதோ அடிக்கொருதரம் தன்னுடைய மகனை அந்தத்தாய் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அவளுக்கு ஒரு மகனா? இந்த உருவத்திற்கா இல்லை! ஆம்!! அவன் அவளுடைய மகன்தான். அவனுடைய பிச்சை வாங்கும் கரங்கள் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டே தனது ஒரே ஆதாரமான அந்தத் தாயின் சூம்பிச் சோர்ந்த எலும்புகளில் புதைந்து விட்ட முலைகளில் உதடுவைத்துச் சுவைக்கும்போது உடல் பலவீனத்தையும் விஞ்சி தாய்மை சுடர்விடுகின்றது. அவளுடைய முலைகளிலும் பாலா? அவன் இடையிடையே அவளுடைய பாண்துண்டையும் கடித்துக் கொள்ளுகின்றான்.

அவன் அவளுடைய மகனானால், அவனுடைய தந்தையார்? அந்தச் சின்ன உருவம், விகாரமான தோற்றம் தாய்மையை என்னவிதமாய் வரவேற்றிருக்கும் அவளுக்குள்ளும் ''அந்த எண்ணங்கள்'' புதைந்துள்ளனவா? அல்லது வீதி நாய்கள் அவளது அருமந்த கற்பைச் சூறையாடி? அல்லது அவளுக்கென்று ஒரு கணவன் இங்கேதான் எங்கேயாவது இருக்கின்றான்? மன அரிப்பின் நமைச்சல் விடையில்லாமல் விறாண்டப்பட்டு இரணமாகின்றது.

அவளுக்கென்று எவருமே இல்லாவிடில் அவன், அவள் இரண்டு பேருமே ஒன்றற்கொன்று ஆதாரங்கள்.

அவன் வீதியைக் கடந்து தோடம்பழக்காரர்களிடமும் அங்கே நின்ற சிலரிடமும் கைநீட்டிக் கிடைத்ததை வாங்கினான். அவற்றைத் தாயிடம் கொடுக்கவென மறு

கரைக்கு வீதியை ஊடறுத்து ஓடி முடிக்கவில்லை, அந்த 'பென்ஸ்கார்' கிறீச்சிட்டுக் குலுங்கி 'பிறேக்' போட்டுக் கொண்டது. அதற்குள்ளிருந்து நீண்ட முடிவளர்ந்த பால் தடுமாறும் உருவமொன்று தலையை உயர்த்தி அநாகரீகமான ஆங்கிலத்தில் ஒன்றுக்கு நாலாக ஏதோ முழங்கியது. சிறுவனுக்கும் தாய்க்கும் விளங்காத மொழி.

கிரீச்சிட்டகார், கோபக்கணை வீசும் அந்த காரிலிருந்த பால் தெரியாதது, கணத்தில் சூழ்ந்த சனக் கும்பல் இவைகளெல்லாம் அந்த அலங்கோல உருவமுடைய அன்னைக்குத் தெரியவில்லை. அவள் தனது அவனை எழுந்தோடிவந்து அணைத்துக் கொண்டு கதறினள். கண்கள் குளமாகப் பிதற்றினள். அவனுக்கு அடிபடவில்லை. அவனது கரங்களிலிருந்து சிதறிவிழுந்த சில்லறைகள் பக்கத்துக்கு ஒன்ருகப் பாய்ந்து ஒதுங்கின. அவள் சில்லறை பற்றிக் கவனிக்காமல் அவனையே வாரி அணைத்தாள்.

கார் போனபின்பு; அவனின், அவளின் அவலங்கள் ஓய்ந்தபோது தான் அவனுக்கு அந்தச் சில்லறைகளின் மேல் திடீரென்று கவனம் திரும்பியது, ஓடிஓடி மனிதக் கால்களின் இடுக்குகள், சிறிய நீரோடை இவற்றிலிருந்து சில்லறைகளைப் பொறுக்கிக் கணக்குப் பார்க்கின்முன். ஏதோ குறைந்துவிட்டது போலும், சுற்றிவரப் பார்த்து அழுகின்முன். 'சில்லறையைத் தனது குச்சிக் கைகளினுல் அன்னையிடம் கொடுக்கின்முன்.

இவ்வளவு நேரமும் இவைகளையே பார்த்துக்கொண்டிருந்த என் விழிப்புலன் இரக்க உணர்வுக்கு வழிவிட்டுக் கொடுத்தது. கார்க்கதவைத் திறந்து அவர்கள் இருக்கும் அந்தப் பிளாட்பாரத்தை நோக்கி என்னையறியாமலேயே நடக்கின்றேன்.

காற்சட்டைப் பையினுள் கையை விட்டு 'பேர்சை' இழுத்தெடுத்துத் திறந்து ஐந்து ரூபா நோட்டொன்றை நீட்டுகின்றேன்.

லபக் கென்று அந்த அவனின் குச்சுக் கைகள் தனது உள்ளங்கையில் அதனை ஒதுக்கி மறைக்கின்றது.

நான் அவனைத் தூக்கி ஒட்டிச் சுருங்கி உலர்ந்த 'அழகுக் கன்னத்தில்' முத்தமொன்று கொடுக்கின்றேன். நிமிர்ந்து பார்க்கின்றேன்; உலகத்து "விகாரங்களெல்லாம்" என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன.

நான் காருக்குள் போய் அமர்ந்தபோது மனப்பாரத்தின் தொகுதிகள் அத்தனையையும் இறக்கிய ஒரு சர்வோன்னத ஆத்ம களிப்பு.

திரும்பிப் பார்க்கின்றேன், நண்பன் அருகில் வந்து கதவைத் திறந்துகொண்டே "பெண்கள் ஆண்டல்லவா இந்த வருடம். எங்கள் மன்றத்தில் 'பெண்களுக்கு விடுதலை வேண்டாமா? வேண்டுமா?' என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் வைத்தால் என்ன?" என்ற

போது! எனது சுட்டுவிரல் அந்த அவளையும், அவனையும் சுட்டிக் காட்டியபடியே நிற்க, எனது உதடுகள் உணர்விழந்து மலடுவத்திப் போயிற்று.

அவ்வேளை இரண்டரை அங்குல விட்டங்கொண்ட சோடாப்புட்டிக் கண்ணாடி, மூன்றங்குல ஹீல்ஸ் வைத்த செருப்பு, நீண்ட அழகிய 'பெல்பாட்டம்' அணிந்த அந்தப் பெண் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

---

## நாளை மறுதினம் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்!

என்னை சுவீப்ரிக்கட் விற்பனையாளர் என்று நினைத்துவிடாதீர்கள்' நம்முடைய எம். பீ. ஒருவர் அதிர்ஷ்டமுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கிறார் வேலை வழங்குவதற்கு, அவருக்கு அதிர்ஷ்டம் உண்டு; அதனால் எம். பி. யானார். ஆனால் அப்பாவி இளைஞர்கள் அதிர்ஷ்டசாலியாக இருந்திருந்தால் எப்பவோ வேலையைப் பெற்றிருப்பார்கள். இல்லையெனின் தகுதிக்கே முதலிடம் கொடுக்கும் ஒரு எம். பி. யின் தொகுதியிலாவது பிறந்திருப்பார்கள். என்ன செய்வது அது அவர்கள் தலைவிதி.

---

## பிழைப்புக்கு ஒருவழி...

யாழ்ப்பாணத் தியேட்டர்களில் வேலை செய்பவர்கள்கூட புது வழியில் பணம் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார்கள் பாருங்களேன். சயிக்கிள் பாதுகாப்பு சதம் 15 என்று போடுவார்கள். யாராவது 25 சதம், 50 சதம் கொடுத்தால் மிகுதிக்குச் 'சில்லறை இல்லை பின்பு வாருங்கள்' என்றுசொல்லி அனுப்பிவிடுவார்கள். தட்டித்தவறி பின்னர் வந்துகேட்டால் அப்போது 'ஏன் வாங்காமல் விட்டாய் சில்லறையில்லை வேண்டுமானால் சயிக்கிளை விட்டுட்டுப்போய் மாற்றிவா' என்று விரட்டியடிப்பார்கள். தற்செயலாக யாராவது 15 சதம் கொடுத்தால் அதை உடனேயே மறைத்துவைத்திருப்பார்கள். எனினும் ரிக்கற் விற்பவர்களும் இதே கலையை மேற்கொண்டாலும் அவர்கள் படம் முடியும்போது ரிக்கற் விற்குமிடத்தில் நிற்காது மறைந்துவிடுவார்கள். இந்தவகையில் அவர்கள் கெட்டிக்காரர்கள். எனினும் எந்தவகையில் பார்க்கப்போனாலும் பாதிப்படைவது அப்பாவி மக்களே. படரசிகர் ஒருவர் இதுவும் புதுமாதிரியான சுரண்டல் என்று வர்ணிக்கின்றார்.

# தடுக்கும் பேதமை

— ஜோதிவசு

செங்கதிர் பிறக்கும்
யோனிக் கதவுகளை
இராவணக் கைகளா
இறுக்கமாய் மூடுகிறது
பிறப்பைத் தடுக்கும்
பேதமை இருப்பதையும்
ஒற்றுமைக் குரலோடு
சிதைத்துக் கதவகல
செம்படைக் கிடமாய்
விலத்து விலத்து.


# 'நாற்காலிகள்'

— கல்வியூர், குமரகுரு சிவகுமார்

நாங்கள் மனிதர்கள்
நாங்கள் நாற்காலிகள்
நடப்பது நாலாலல்ல
நடப்பது இரண்டாலே
நமக்குண்டு பகுத்தறிவு
நாய்க்கு அதுவோயில்லை
நாய்க்கோ நன்றியுண்டு
நமக்கோ அதுவுமில்லை
நமக்காரன நன்மதுவை
நன்றாகப் பருகிவிட்டால்
நாலுகாலாலும் நடத்திடுவோம்
நாய்களாய் மாறிடுவோம்.

# குறுக்கெழுத்துப் போட்டி

கொக்கூர் கண்ணு



1-ம் பரிசு:-
12 மாத சந்தா

2-ம் பரிசு:-
6 மாத சந்தா

## இடமிருந்து வலம்

1) இலங்கை வேந்தனின் கொட்டத்தை அடக்கி, அவன் தம்பிக்குப் பட்டம் சூட்டியவன்.
2) ஐரோப்பியர் கீழைத்தேசம் வந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.
3) உணவு சீரணித்தலுக்கு இவற்றின் தொழிற்பாடு மிகவும் அவசியம்.
4) சிவனை மதிக்காது, அகந்தையால் ஐந்தில் ஒன்றை இழந்தவன்.
5) மக்களின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பது.

## மேலிருந்து கீழ்

1) இது இருளில் தான் சஞ்சரிக்கும்.
2) சோதிடர்கள் பலன் பார்க்கும்போது இவற்றையும் சேர்த்துக் கணிப்பதுண்டு.
3) சேவல் உருவெடுத்துக் கூவியவன்.
4) இந்தக் கை கணபதிக்குமுண்டு.
5) தங்கச் சுரங்கங்கள் இதற்குள்ளேயே இருக்கின்றன.
6) பெண்களின் நடைக்கும் இதன் நடையையும் உவமையாகக் கூறுவர்.

# திறமான சேவை

வாடிக்கையாளரின் திருப்தியே
எமது இலட்சியம்

உத்தரவு பெற்ற மொத்த சில்லறை வியாபாரம்
எங்களிடம் A. R. S. நல்லெண்ணெய், சம்பா,
நாட்டு அரிசி வகைகளும் மற்றும் பலசரக்குச்
சாமான் வகைகளும் சாப்புச் சாமான்களும்

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## இன்றே விஜயம் செய்க.

உரிமையாளர்: ச. இலங்கைநாதன்

## அன்னராஜா ஸ்ரோர்ஸ்

இல. 99, பழையமாக்கற்
(யாழ்/சயிக்கிள் பாக் அருகாமை)
யாழ்ப்பாணம்.

# — அறிவை ஆராயுங்கள் —

1. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு பிரதமர் யார்?
2 உலகின் முதலாவது பெண் ஜனாதிபதியாக இருந்தவர் யார்? எந்நாட்டின்?
3. உலகின் மிகப் பெரிய சிலை எது? எங்குள்ளது?
4. தற்போதைய உலக அதிபார குத்துச்சண்டைச் சம்பியன் யார்?
5. ஐ. நா. ஸ்தாபனத்தின் பிரிவுகளில் அடங்கும், (i) UNESCO (ii) FAO (iii) WHO என்பன குறிப்பது எதனை?
6 முதன்முதல் இதயமாற்றுச் சத்திரசிகிச்சையை மேற்கொண்டவர் யார்?
7. இந்தியாவில் ராக்கெட் தளம் எங்கு அமைந்துள்ளது?
8. 'கிறிஸ்மஸ்' வாழ்த்து அனுப்பும் பழக்கம் எப்போ, யாரால், எங்கு ஆரம்பிக்கப்பட்டது.

---


இங்கே கத்தரிக்கவும் சந்தா விண்ணப்பப் பத்திரம்

## "தென்றல்"

சந்தா விபரம்: 6 மாதங்கள் — 6-25 12 மாதங்கள் — 12-50

பெயர்:..............................................................

முகவரி:..............................................................

திகதி: ..................................

எனக்கு ........................ மாதத்திற்கு தென்றல் சஞ்சிகையை அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றேன். இதற்கான சந்தாப்பணமாக ரூபா ........................ ஐ இத்துடன் தபாற்கட்டளையாக இணைத்துள்ளேன்.

.....................................

கையொப்பம்

மில்க்வைற்

மில்க்வைற்
தயாரிப்புக்களுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு
கொடுக்கும் ஆதரவாகும்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, (தொலைபேசி: 7233) யாழ்ப்பாணம்.

- அண்ணா சிப்ஸ் கோப்பி — 5
- சோயாற்ரின் — 5
- அண்ணா பற்பொடி — 25
- அண்ணா பத்திகள் — 15

# அண்ணா தொழிலகம்

இணுவில். போன்: 7412

கிளைகள்:

இல 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7413

இல. 1, மத்திய சந்தை,
சுன்னாகம்.

தமிழ் ஈழப் பொருளாதாரம்

# நாடுமுன்னே... நாம்பின்னே...

— மறவன் புலவன்

அத்தியாயம் (1)

ஒரு தாய். அவளுக்குப் பல குழந்தைகள். எல்லாக் குழந்தைகளும் ஒரேமாதிரி அமையவில்லை. ஒன்று ஊனமுடையது. மற்றொன்று புத்தி நிறைந்தது. மற்றொன்று சூள்ளமானது. மற்றொன்று யாருக்கும் பயலற்ற பழக்கம் உடையது.

இக் குழந்தைகளைப் பெற்ற தாய், குறைவை நோக்கியோ நிறைவை நோக்கியோ, தன் அன்பை வேறுபடுத்த மாட்டாள். எல்லாக் குழந்தைகளும் அவளுக்குக் குழந்தைகளே.

அத்தாயின் அன்பில், அரவணைப்பில், ஆதரவில் குழந்தைகள் வளர்கின்றன. வாழ்கின்றன. வளம் பெருக்குகின்றன.

நாடும் அவ்வாறே. நாடு மக்களுக்குத் தாய். நாடுமீது மக்கள் பற்று உடையர். நாடு எத்தகையதாயிலென், அந்நாட்டு மக்களுக்கு அதுதான் தாய்நாடு. நாட்டுப் பற்று என்ற உணர்வுத் தொடர்புதான் அம் மக்களின் வாழ்வுக்கு அடிப்படை.

பொருளாதார வளம் பற்றிச் சிந்திக்கும் அறிஞர்கள், நாட்டுப் பற்று முதல் வேண்டும் எனக் கூறுவர். "இது என் நாடு. இதனை முன்னேற்ற வேண்டும். முன்னேற்றுவதற்காகத் தியாகம் செய்ய வேண்டும். இந்த உணர்வு உண்டெனின், நாடு வாழ, நாம் வளம் பெறலாம்.

நாட்டில் மூலவளங்கள் இல்லாதிருக்கலாம், மூலதனம் இல்லாதிருக்கலாம். நாட்டுப்பற்று உடைய மக்கள் உளரேல் நாடு வளம் பெருகி மக்கள் வாழ்வுறுவர். எனவே நாட்டுப் பற்று பொருளாதார வளத்துக்கு அடிப்படையாக உள்ளது.

இந்நாடு எனது நாடு. இந்நாட்டு வளமே என் வளம். இந்த நாட்டு முன்னேற்றமே எனது முன்னேற்றம் என்ற நல் நோக்கைத் தருவது நாட்டுப்பற்று.

நாடு முன்னே நாம் பின்னே என்ற நோக்கம வளம் பெருக்கும் நோக்கம். நாட்டுக்காக நமது நலனை விட்டுக் கொடுக்க முன்வரின் நாடு முன்னேறும்.

இருபது முப்பது ஆண்டுகளுள், அளப்பரிய பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகளின் மக்கள்

நாட்டுப் பற்று உடையவராயிருந்தனர். போரில் தோல்வி அடைந்த நாடுகளான ஜெர்மனியும் ஜப்பானும், முப்பது ஆண்டு கால இடைவெளியில் அளப்பரிய முன்னேற்றம் அடைந்தன. மூலவளத்தாலும், மூலதனத்தாலும் முன்னேறிய நாடுகளான, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் பொருளாதாரம் தளர்ச்சி அடைய, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது.

ஜெர்மனியர் தம் நாட்டின் மீது, தம் மொழியின்மீது, அளப்பரிய பற்றும் உடையவராக இருந்தனர். ஏனைய நாடுகளை விடத் தாம் முன்னேறியவர்கள் என்ற பிடிவாத உணர்வுடன் ஓய்வொழிவின்றி வேலை செய்தனர்.

யப்பானியரும் அவ்வாறே போரில் ஏற்பட்ட தோல்வியும் அவமானமும் அவர்களைப் பொருளாதாரப் புலிகளாக்கின. கடுமையான உழைப்பினால், நமது நாடு, நமது முன்னேற்றம் என்ற முனைப்பும் பிடிவாதமும் உந்த விரைந்து முன்னேறினார்கள்.

சிங்கப்பூரில் உள்ள மக்களின் முன்னேற்றத்துக்கும், இஸ்ரேலியரின் முன்னேற்றத்துக்கும் நாட்டுப் பற்றே காரணம்;

தமிழ் ஈழம் வளம் பெற்று முன்னேற முதலில் தமிழ் ஈழத்து மக்கள் நாட்டுப் பற்று உணர்வு உடையராதல் வேண்டும். நாடு முன்னே, நாம் பின்னே என்ற தாரக மந்திரம் அவர்கட்கு மிக அவசியம்.

– தொடரும்

---

# அறிவை ஆராயுங்கள்

(விடைகள்)

1. *வியட்நாமிய பிரதமர், வான்டோங்.*
2. *இசுபெல்பேரன்; ஆர்ஜென்டீனா,*
3. *சுதந்திரச்சிலை; நியூயோர்க்.*
4. Leon Spinks.
5. (i) United Nations Educational Scientific and Cultural Organization.
   (ii) Food and Agriculrural Organization.
   (iii) World Health Organization.
6. *டாக்டர் கிறிஸ்டியன் பெர்னாட்.*
7. *ஸ்ரீ ஹரிகோட்டா.*
8. *1840'ம் ஆண்டு ஹென்றிகோர்ட் என்பவரால் பிரித்தானியாவில்.*

நெடுங்கதை

# சந்தேகத்துளி

கொக்கூர் கண்ணு

இந்த இருபதாம் நூற்ருண்டின் மனித சமுதாயத்தில், சந்தேகம் என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில், இனம் தெரியாத காரணங்களினுல், சந்தேகமானது மனிதனுடைய நினைவிலோ அன்றி மனத்திலோ, சொட்டும் மழைத்துளி நிலத்தில் ஊறுவதுபோல, அவனுள்ளும் ஊறஆரம்பித்து விடுகிறது. இது மீண்டும் கொடிபோல படருமேயானுல், கணவன் மனைவியருக்கிடையே உள்ள உறவுகள் அற்றுப்போய்விடும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய அனுவசியச் சந்தேகத்துக்கு இடம் கொடுத்த ஒரு கணவன் மனைவியின் வாழ்க்கைச் சித்திரத்தையே இங்கு கூறுகிறேன்.*

யாழ்ப்பாணத்திலுள்ள தெல்லிப்பளையில், அமரிக்கன் பற்றனில் ஒரேயொரு வீடு மாத்திரம், பூஞ்செடிகள் சூழ அதன் நறுமணமானது சூழல் எங்கும் வீச, மத்தியில் அமைந்திருந்தது. அங்குதான் பெரியசாமிப் பிள்ளை குடும்பத்தினர் வசித்து வந்தனர். பெரியசாமிப் பிள்ளைக்கும் மனைவி அன்னம்மாளுக்கும் பிறந்த ஒரேயொரு தவப்புதல்வன் தான் நமது கதாநாயகன் கோபால்..... பெரியசாமிப்பிள்ளை பெரிய பணக்காரர். அவர் பேச்சில் எப்போதும் உறுதி நிறைந்திருக்கும். அவர் உடை, நடை பாவனைகள் எல்லாம் அவரை ஒரு பெரிய பணக்காரன் என்பதை வெளிப்படுத்திவிடும். அப்போது கோபாலுக்கு இருபது வயது முடிந்து இருபத்தியொரு வயது ஆரம்பிக்கும் காலம். அவன் தனது ஜீ. சி. இ. ஏ எல்லை முடிக்கும் சமயம்.

கோபால் ஓர் ஆணழகன். தினமும் தனக்கென்றுள்ள சிவப்பு நிற 'பியட்' காரில்தான் கல்லூரி செல்வது வழக்கம். அவனது கார் தூர வரும்போதே, இனிமையான சப்தத்துடன் தான் வெகு வேகமாக வரும். தினமும் அவனது கார் வேம்படி மகளிர் கல்லூரியை நோட்டம் விட்டுத்தான் யாழ் மத்திய கல்லூரிக்குச் செல்லும் வழக்கமாகி விட்டது. அது அவனுடைய இளம் பருவத்தின் சிறு உந்தல். காலை 8-30 மணிக்கு, எத்தனையோ இளம் உள்ளங்கள் அவன் வரவு காத்து நிற்கும். ஆனுல் அவன் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு காலம் கழிந்து கொண்டே இருந்தது.

ஒரு நாள் அவனது கார் சற்று வேகமாகவே வந்தது என்று சொல்லலாம். அந்த நேரம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஒருத்தி சாலையைக் கடக்க முயன்று கொண்டிருந்த சமயம், எதிர்பாராத விதமாக அவனுடைய கார் அவளைச்

சற்று உரசிவிட்டது. அவன் எவ்வளவோ, காரின் வேகத்தைக் குறைத்தும் அது அவள் மேல் முட்டத்தான் செய்தது. எதிர்பாராத தாக்குதலினால், அவளுடைய வலது கரல் பக்க தாவணியும் சற்றுக் கிழிந்து காலில் சிறிது காயம் ஏற்பட்டு அவள் விழ்ந்து விட்டாள். உடம்பில் ஏற்பட்ட வலியினாலும், பயத்தினாலும் உடல் வியர்க்க, அவளுடைய அழகிய வதனத்திலிருந்து நீர் தாரையாக வழிந்தது. கோபால் காரை ஸ்டப் செய்துவிட்டு, அவளை அணுகினான். அங்கு கண்ட காட்சி அவன் மனதில் இனம் தெரியாத ஒரு அநுதாபத்தை ஏற்படுத்தியது. உடனே சிறிதும் தாமதியாமல் காலையில் கூட்டம் கூடும்முன், அவளைத் தன் இரண்டு கைகளாலும் அலக்காகத் தூக்கி காரின் பின் சீற்றில் படுக்க வைத்தான். பின் காரை ஸ்ராட் செய்து, முதலுதவிக்காக சிறிது தொலைவிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றை அணுகினான். அங்கு அவளுக்கு அதாவது அவளுடைய காயத்துக்கு மருந்து கட்டப்பட்டது. பின் அவளைக் காரிலேயே கூட்டிக் கொண்டு புறப்பட்டான். அவளுக்கு தாம் எங்கு செல்கிறோம் என்ற பீதி மனத்தில் குடிகொண்டது. அரை வாசித்தூரம் சென்றதும் கரையோரமாக தன் வண்டியை நிறுத்தினான். பின், காரில் இருந்தபடியே அவனிடம் எதிர்பாராதவிதமாக நடைபெற்ற விபத்துக்கு மன்னிக்கும்படி வேண்டும்போது அவள் அவன் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தாள். சில நிமிடங்கள் இருவரும் பேசாமல் ஒருவரையொருவர் உற்று நோக்கினர். அவன் அவளழகிலும், அவள் அவனழகிலும் மயக்கமுற்றனர். இச்சமயம் காலையில் சென்ற லாரியின் சத்தம் அவர்களை திடுக்கிடச் செய்தது. அவள் தன் கோவ்வைச் செவ்வாயினின்றும் ஒரு இளம் புன்முறுவல் ஒன்றை உதிர்த்தாள். பதிலுக்கு அவனுடைய மனம் நன்றி கூறிக்கொண்டது. அவள் தான் பஸ்சில் வீடு செல்வதாகக் கூறினாள். அவளுடைய தாவணி கிழிந்திருந்ததினால், தானே வீட்டில் கொண்டு போய் விடுவதாகக் கூறி காரை 'ஸ்ராட்' செய்தான். அவள் ஜீ. சி. இ. ஓ. எல். படிக்கிறாள் என்றும், சிவலிங்கப்புளியடி அண்ணாமலை முதலியாரின் இரண்டாவது மகள் சாந்தி என்றும், அவள் கூறக் கேட்டறிந்தான். ஆம்! இவள் உண்மையில் சாந்திதான் என அவன் மனம் கூறிற்று. இந்தப் பச்சிளம் அழகியே நம் கதாநாயகி. சிறிது நேரத்தில், அவனது கார் ஓர் அழகிய பங்களா முன் நின்றது.

சாந்தி, முதலியாரின் செல்லப் பிள்ளை. அவளது அக்காவின் திருமணத்திற்குப்பின், முதலியார் தன்னுடைய தாயில்லாப்பிள்ளை சாந்தியுடனேயே வசித்து வந்தார். அவளுக்காக அவர் எதையும் செய்யத் தயாராகவே இருந்தார் என்று சொல்லலாம். அவர், கோபாலை அழைத்துக்கொண்டு, வீட்டினுள் சென்றாள். அங்கு தன் தந்தையிடம் நடந்தவற்றை விபரித்தாள். அப்போது அவன் தன்னுடைய மனவருத்தத்தைத் தெரிவித்து வீடு நோக்கிப் புறப்பட்டான். பின் முதலியாரும் பெரிய நீண்ட பெருமூச்சினைவிட்டபடி அவளது

நற்பண்பினை யோசனை செய்தவாறு வெளியேறினர். சாந்தி தன் புடவையை மாற்றுவதற்காக அறையினுள் சென்றாள். புடவை மாற்றியதும் அப்படியே தன்னுடைய கட்டிலில் படுத்துவிட்டாள். அவள் நெஞ்சு கோபாலை நினைந்து நினைந்து விம்மியது. அவனை நினைத்தபடியே தூங்கிவிட்டாள். அதேநேரம் கோபாலின் கார் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அவனது எண்ண அலைகள் படர்ந்துகொண்டே சென்றன. அவளது அழகினை ரசித்தவாறே வீடு போய்ச் சேர்ந்தான். எப்போதும் இல்லாத இன்பக்களை அவன் முகத்தில் இப்போது வீசிக் கொண்டிருந்தது. அவனது எதிர்பாராத வரவு கண்டு அன்னம்மாள் அதிசயித்தாள். எனினும் அவனிடம் எதையும் கேட்கும் தைரியம் இல்லை. நேராக அவன் தனது அறைக்குள் சென்று, வரும் மறுநாளுக்காக காத்திருந்தான்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை 9-30 மணிக்கு அவனது கார், வேம்படி மகளிர் கல்லூரியை அடைந்தது. அவளும் அவன் வரவுக்காக கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள பஸ்ராண்டில் காத்து நின்றாள். அவனைக் கண்டதும் அவனுடைய காரின் வேகம் அவனையறியாமல் குறைந்து, நின்றது. அவள் முகத்தில் இளம் புன்னகை தெரிந்தது. அவளது அன்புப் பார்வை அவனை என்னவோ செய்தது. அவன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ஏதோ ஒரு உரிமையில் "சாந்தி இப்போது உன் கால் புண் எப்படி உள்ளது?" என்று வினவினான். அதெல்லாம் அப்பவே மாறிவிட்டது என பதிலளித்தாள். பின் "ஏன் பயந்து விட்டீங்களா கோபால்" என அன்புடன் குழைந்தாள். அதற்கு அவன் முறுவலித்தான். பின் நாளை காலை சந்திப்பதாகக் கூறி விடை பெற்றான். அவளும் கல்லூரிக்கு சென்று விட்டாள். இவ்வாறு இவர்களது சந்திப்பு மொட்டுவிட்டு பூவாக மலர்ந்தது. கோபாலும் ஒருவாறு கஷ்டப்பட்டு தனது பரீட்சையில் தேறினான். அவனுக்கு பிறைவேட் கம்பனியில் வேலையும் கிடைத்தது. அவனது பெற்றோர்கள், அவன் ஒரே பிள்ளையானதால் திருமணப் பேச்சை தொடங்கினர். அப்போது அவன் தன் மனத்தில் குடிகொண்டிருக்கும் அந்த இன்பத்தேவதையைப்பற்றிக் கூறினான். அவனது பெற்றோர்களும் சம்மதித்து சாந்தியைத் திருமணம் செய்து வைத்தனர். திருமணத்தின் பின்னர் அவள் தனது கல்லூரிக்கு முழுக்குப் போட்டாள். தன் கணவன் வீட்டிலும், தன் வீட்டிலும் மாறிமாறி வாழ்க்கை நடத்தினாள்.

இளம் பருவத்தினர் ஆதலால் ஒருவருடம், காதல் வாழ்க்கையே நடத்தினர். படங்களும் பண்ணை பீச்சும் அவர்களது பொழுதுபோக்கும் இடங்களாக விளங்கின. மற்றும் கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கும் தங்கள் உல்லாசப் பயணத்தை மேற்கொண்டனர். இரண்டாவது ஆண்டில் அவள் கர்ப்பமானாள். அவனுடைய அழகையும் அவளழகையும் சேர்த்து உருக்கி அச்சில் வார்த்தாற்போல் ஓர் அழ

இவ பச்சிளம் பெண் குழந்தை யொன்று பிறந்தது. வீடு முழுவதும் அக் குழந்தைக்கென பற்பல விளையாட்டுப் பொருட்கள் வாங்கிப் போடப்பட்டன. குழந்தைக்கு செல்வி என்ற பெயர் சூட்டப்பட்டது. அதுவும் ஓராண்டு வயதைப் பூர்த்தி செய்தது. நாளுக்குநாள் அவர்கள் அன்புறவு கொடிபோல் வளர்ந்து கொண்டேயிருந்தது. அளவுக்கு மிஞ்சின அன்பும் பாசமும் ஒரு நாளைக்கு கசக்கத்தான் செய்யும் என்ற வாக்குக்கு இணங்க, ஒரு நாள் அவர்கள் இன்ப வாழ்வில் புயல் அடிக்கத் தலைப்பட்டது.

இவ்வாறு வாழ்க்கையின் இன்பங்களை அநுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில், கோபாலுக்கு வெளியூருக்கு வேலை மாற்றம் கிடைத்தது. அவன் வெளியூர் போவதற்கு முதல்நாள் காலை சாந்தியின் அக்காவிடம் இருந்து தந்தையைப் பார்த்துப் போவதற்காக இரண்டு கிழமை லீவில் வருவதாகக் கடிதம் வந்தது. கோபால் வெளியூர்போய் வீடு பார்க்கும் வரையில் சாந்தியையும் குழந்தையும் அவர்கள் வீட்டில் விட்டுவிட்டுப் போவதாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சாந்தியும் அக்காவின் வரவால் சந்தோஷப்பட்டாள். அன்று மாலை கோபாலுக்கு பிரிவு உபசாரவிழா அவர்கள் கம்பனியில் கொடுக்கப்பட்டது. அந்த விழா முடிவில் அவனது நண்பர்களின் வலோத்காரத்தினால் நன்றாகக் குடிவகைகள் பாவித்து, இரவு வந்தபின் வீடு திரும்பினான். அன்று அவனது உணர்ச்சிகள் சற்று கூடுதலாகவே தொழிற்பட்டன. அடுத்த நாள் காலை மனைவி சாந்தியைவிட்டு வேற்றூர் செல்ல இருப்பதாலும் உந்தப்பட்ட உணர்ச்சிகளாலும் மனைவியுடன் அன்று உடலுறவில் ஈடுபட்டான். அன்றைய பொழுது சந்தோஷமாகவே கழிந்தது. மறுநாள் காலை வேற்றூர் பயணமானான். அன்று மாலை சாந்தியின் அக்கா கணவன் அதாவது அவள் அத்தான் மாத்திரம் தனியாக வீடு வந்து சேர்ந்தார். சாந்தி, அக்கா ஏன் வரவில்லை என வினவினாள்? அவர்களுடைய பிள்ளைக்கு இருந்தாற்போல் சுகவீனம் கண்டதாலும் பிள்ளையையும் வீட்டையும் விட்டு வர முடியாததாலும் தானே தனியாக வந்ததாக கூறினார். அவளுடைய அத்தான். சாந்திக்கு தன்னுடைய அத்தானுடன் பேசுவதென்றாலே நல்ல விருப்பம்; அவருடைய தமாசான கதைகளும் ஜோக்குகளும் அவளைக் கவர்ந்திருந்ததே காரணமாகும். அவரும் அவள்மேல் நல்ல அன்பு வைத்திருந்தார். அதன் காரணமாக ஊரிலிருந்து வரும்போதே அக்கா கொடுத்ததாகச் சொல்லி நல்ல பச்சை வண்ண டிசைன்கள் போட்ட ஒரு விலையுயர்ந்த சேலையொன்றை பரிசாக கொண்டு வந்து கொடுத்தார். அவளும் தன் அக்காவின் கணவனை நன்றாக உபசரித்தாள். இரண்டு வாரங்களின் பின் தன் அலுவல்கள் அனைத்தையும் முடித்துக்கொண்டு அவர் ஊருக்கு கிளம்பிவிட்டார். அவர் சென்ற இரண்டு கிழமைகளின் பின் சாந்திக்கு வாந்தி குமட்டத் தொடங்கியது. அவள் கர்ப்பமானாள். தான் தாயாக இருக்கும் நற்செய்தியையும், தன் அத்தானுர்தான் தனி

யாக ஊருக்கு வந்து இரண்டு கிழமை தங்கினதாயும் அவன் கோபாலுக்கு ஓர் கடிதம் போட்டாள்.

கடிதம் கண்ட கோபால், சாந்தி தாய்மையடைந்தது கண்டு திகைப்புற்ருன். அவனுக்கு எதுவும் நினைவில் வரவில்லை. எல்லாவற்றுக்கும் பதிலாக, சாந்தியின் அக்காவின் கணவன்மேல்தான் சந்தேகம் வளர ஆரம்பித்தது. அவன், தான் திருமணமான நாளிலேயே, சாந்தி தன் அத்தானுடன் குழைந்து குழைந்து பேசுவதைக் கண்டெல்லாம் காணுதது மாதிரி இருந்திருக்கிருன். அப்போது அவன் ஒருவித பாச உணர்ச்சி என்றே நம்பியிருந்தான். இன்று அவளின் கர்ப்பமான செய்தி அவனை திடுக்கிடச் செய்தது. அத்துடன் சந்தேகத்தையும் வளர்த்துக்கொண்டது. அவன் கடிதம் கண்ட மறு புகைவண்டியிலேயே வீடு வந்து சேர்ந்தான். சாந்தியும் கூட அவன் வரவை எதிர்பார்த்துத்தான் இருந்தாள். அவள் கோபாலுக்கு தன் அத்தான் அன்பளித்த சேலையைக் காட்டுவதற்காக நேரத்துடன் குளிச்சு, பூவும் பொட்டுமிட்டு அதே சேலையையே கட்டிக்கொண்டு இருந்தாள். அச்சமயம்தான் கோபாலும் வீடு வந்து சேர்ந்தான். அன்று அவள் என்றுமில்லா அழகுடன் பொலிவுற்றிருந்தாள்.

கோபால் வந்ததும் வாராதது மாக, அவள் சேலையைப் பார்த்ததும், சேலையைப்பற்றிக் கேட்டான். அவள் அதற்கு தன் அத்தானின் அன்புப் பரிசு என்ருள். இவளின் இச்சொல் அவனுக்கு தன்னை செருப்பால் அடித்தால் போன்ற உணர்வைக் கொடுத்தது. அவனது முகத்தில் சோகம் படர்ந்தது. அன்று அவள் அவனை சாப்பிட அழைத்தும், கேட்காதது போல் பாசாங்கு செய்தான், பேச்சில்கூட சந்தோசம் நிறைந்திருக்கவில்லை. அவளுக்கு தன் கணவனின் நடத்தைகள் பேராச்சரியத்தைக் கொடுத்தது. எனினும் அவள், அவனுக்கு பிரயாணம் செய்த களைப்புப் போலும் என்று சும்மாக இருந்துவிட்டாள். மறுநாளும் கூட அவள் தன் அத்தானர் சொல்லிச் சிரிச்ச ஜோக்குகளையும் கோபாலுக்குக்கூறிக் கொண்டிருந்தாள். இவள் இவ்வாறு கூறக்கூற அவனது சந்தேகம் அந்த அப்பாவி மேலும் சாந்திமேலும் வளர்ந்துகொண்டே இருந்தது. அவ்வாறு வளர்ச்சியுற்ற சந்தேகம் ஒருநாள் வெடித்து வாழ்வில் புயலைக் கொடுத்தது. அவள் நிலைமை அறியாது கலங்கிஞள். அவனின் போக்குகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டேயிருந்தது. முடிவில் அவன் ஒருநாள் தாங்கமுடியாத வேதனையில், அவளை "வேசி, பிறன் மனைவி" என்றெல்லாம் பேசிவிட்டான். அவள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பயனில்லாமல் போய்விட்டன. எல்லாம் "செவிடன் காதில் ஊதின சங்கு" போலாயிற்று. அவள் உண்மையைப் புரிய வைக்கக் கதறிஞள். அவனே உணர்ச்சி வசத்திஞல் அவளை அடித்து உதைத்தான். பின் மறுநாள் காலையே தன் உடுப்புகளை எடுத்து பெட்டியில் போட்டுக்கொண்டு தான் வேலைசெய்யும் ஊருக்கு, அவளுக்கும் ஒன்றும்

சொல்லாமல் போய்விட்டான். அவள் அழகிய வதனத்திலிருந்து கண்ணீர் தாரையாக வழிந்து கொண்டிந்தது. இந்த வெட்கம் கெட்ட பேச்சை வெளியில் யாரிடமும் சொல்ல முடியாமல் தவித்தாள். ஒன்றின்மேல் ஒன்றாக எத்தனையோ கடிதங்கள் கோபாலுக்குப் போட்டாள். பதில்கள் ஒன்றுமே வரவில்லை. கோபால் போகும்போது தன் உற்ற நண்பனிடம் சென்று இவ்விடயம் பற்றி அவனிடம் கூறி, யோசனைகேட்டான். அவன் "சாந்தி நல்லவள் என்றும், அப்படி இருந்திருக்க முடியாது என்றும், அவனை போய் சந்தோசமாக வாழும்படியும் புத்தி கூறினான்". ஆனால் கோபாலோ எதையும் கேட்காமல் ஆத்திரத்தில் ஏதோ எல்லாம் உளறினான். கடைசியில் தன் மனைவியின் நடவடிக்கைகள் பற்றிக் கவனித்து கடிதம் போடுமாறு கூறிவிட்டே வெளியூர் சென்றான்.

ஃ ஃ ஃ

ஒருநாள் சாந்தி தன் அக்காவுக்கு "தன் அத்தானின்மேல் கணவன் வைத்திருக்கும் தப்பபிப்பிராயத்தைப் பற்றியும், அவன் வேற்றூர் போவதற்கு முதன் நாள் தன் கணவன் குடிபோதையில் வந்தே தன்னுடன் உடலுறவு பூண்டதாயும், அதனாலேயேதான், தான் கர்ப்பமாகியிருப்பதாயும் எழுதி, தன் மனவருத்தத்தையும் தெரிவித்து" கடிதம் ஒன்றை பக்கத்து வீட்டு சிறு பையன் மூலம் அதை தபாற்கந்தோருக்கு அனுப்பினாள்; அந்த நேரம் தெருவில் வந்துகொண்டிருந்த கோபாலின் நண்பன் அவள் கடிதத்தை, பையனிடம் கொடுப்பதைக் கவனித்து விட்டான். அவள் வீட்டுக்குள் சென்றதும், பையனிடம் இருந்து கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அதிலிருந்த உண்மையான நிகழ்ச்சியையறிந்த அவன் அடுத்தகணமே அதிலிருந்தவற்றை கோபாலுக்கும் எழுதி; அந்தக் கடிதத்தையும் அவள் அக்காவுக்கே அனுப்பி விட்டான்.

கடைசியாக சாந்தியின் அக்காவின் கணவனிடம் இருந்தும் கோபாலுக்கு ஓர் நீண்ட கடிதம் இதைப் பற்றி மனம் வருந்தி அவர் எழுதியிருந்தார். கோபாலே தனது அவசரப் புத்தியினால் எழுந்த அநாவசியச் சந்தேகத்தை நினைந்து நினைந்து உள்ளம் வருந்தினான். அவனுக்கு இனி எவ்வாறுபோய் சாந்தியின் முகத்தில் விழிப்பது என்ற கேள்வி எழுந்தது. அவளைப்பார்க்கவே வெட்கப்பட்டான். இருந்தாலும் அவன் அவளிடம் உடன் சென்று, தன்னுடைய தப்பபிப்பிராயத்தையிட்டு மன்னிக்கும்படி கேட்கவேண்டுமென்று துடியாய் துடித்தான். ஒவ்வொரு நிமிடமும் அவளுடைய இளகிய மென்மையான இதயத்தைப் புண்படுத்திவிட்டோமே என்ற எண்ணம் அவனை உறுத்திக் கொண்டிருந்தது.

இதற்கிடையில், சாந்தி தன் கடந்தகால இன்ப வாழ்க்கையையும் தற்போதைய நிலைபற்றியும் எண்ணியவளாய் வேதனையில் புழுவாய்த் துடித்துக்கொண்டிருந்தாள். தான் எவ்வளவோ அன்பு செலுத்தியும், தன்னைச் சற்றும் புரியாத நிலையில் கணவன் இதுபோன்ற தப்

பெண்ணத்தை வளர்த்துக் கொண்டதுபற்றி எண்ணி கலங்கினாள். அவளுடைய இளகிய இதயம் உலக இன்ப வாழ்வையே வெறுக்கும் அளவிற்கு அந்த சந்தேகம் எழும்பியிருந்தது இது அவளுக்கு மனவேதனையைக் கொடுத்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய உடம்பு வலுவிழந்து. நோய்வாய்ப்பட்டாள். அவளுடைய தந்தையோ ஒன்றுமறியாத நிலையில் குழம்பிக் கொண்டிருந்தாள். குழந்தை செல்வி ஒருபக்கம் வீரிட்டு அலறிக்கொண்டிருந்தது. கடைசியில் அவளுக்கு "கான்சர்" என்று டாக்டர் சொல்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். நோயும், மேட்டிலிருந்து பள்ளத்திற்கு நீர் எவ்வளவு சீக்கிரத்தில் வருமோ, அதுபோல, வெகு விரைவாக பரவிவிட்டிருந்தது. இந்நிலையில்தான் கோபால், மன்னிப்புக்கோரி. அவளுக்காக ஒரு பட்டுச் சீலையொன்றும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருகிறான். வீடு பூட்டிக் கிடந்தது. யாவரும் ஆஸ்பத்திரியில் என பக்கத்து வீட்டுக்க ரர் மூலம் அறிந்து. ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தான்.

அங்கு 'அவன் உட்சென்றதும் அவளது கண்களினின்றும் நீர் அருவியாகப் பாய்ந்தது. அவனிடமிருந்தும் மனவேதனை தாங்கமுடியாது கண்ணீர் வந்தது. கடைசியாக அவள் தன் குழந்தையைக் கட்டிப்பிடித்து முத்தம் ஒன்றைக் கொடுத்து அதை கோபாலின் மடியில் வைத்தாள். அப்போது கோபால் நா தளதளக்க தன்னை மன்னிக்குமாறு வேண்டும்போது. அவளுடைய உயிர் இவ்வுலகை விட்டே "ஆம்" என்றுகூட சொல்ல முடியாமல் சென்றுவிட்டது. ஆம்! சுடர் விட்டு எரிந்த அந்தக் குடும்ப விளக்கு அணைந்துதான் போய் விட்டது. கோபால் வாய்விட்டுக் குமுறினான். அவளுக்காக வாங்கிவந்த சீலை, அவளுடைய பிணத்திற்குத்தான் போடப்பட்டது. என்ன செய்வது மற்றவர்களால் அவனுக்கு ஆறுதல் சொல்லத்தான் முடிந்தது. அணைந்த விளக்கைத் தூண்ட முடியவில்லையே. அந்தப் புனிதவதியின் ஆவி சாந்தியடைய நாமும் பிரார்த்திப்போமாக.

முற்றும்


With Best Complements

# Bharani Pharmacy

Hosptial Road,
JAFFNA.
*T. P. 7386*

# ஐயம் திரிபுற ...

V. சந்திரன்

மட்டக்களப்பு.

கே. தமிழர் விடுதலைக் கூட்டணி தனது போராட்டத்தை எப்போது ஆரம்பிக்கும்.

ப. சற்றுப் பொறுங்கள். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அதற்கான நாள் நட்சத்திரத்தைத் தற்போது ஆராய்ந்து வருகின்றுர்கள்.

கே: தமிழர் பிரச்சனையைத் தீர்க்காத இலங்கை அரசு ஐ நா. சபையில் சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றதே?

ப: ஆம்! ஊருக்குத்தானடி உபதேசம் உனக்கில்லையடி கண்ணே.

S. குமார்

பருத்தித்துறை வீதி,

கோப்பாய்.

கே: நான் ஒரு படம் தயாரித்தால் அதில் நீர் நடிப்பீரா?

ப: 'எக்ஸ்ட்ரா' பாத்திரத்திலா அல்லது பொறுப்பான பாத்திரத்திலா என்பதை முதலில் கூறுங்கள்.

கே: தங்கள் பத்திரிகையை இருத்தல் கணக்கில் விற்கலாம் என எண்ணுகிறேன்?

ப: ஏன்! அவ்வாறு செய்வதிலும் பார்க்க அதனை உமக்கு உணவாகப் பயன்படுத்தலாமே!

M. சம்சுதீன்

புத்தளம்.

கே: ரஜனிகாந்துக்கும் லதாவிற்கும் திருமணம் நடைபெற விருப்பது உண்மையா?

ப: நான் என்ன கல்யாணத் தரகரா? ரஜனிகாந்தின் நடிப்பை படத்தில் பார்த்து ரசித்து விட்டு சும்மா இரும். உமக்கென்ன ரஜனிகாந் லதாவை முடித்தாலென்ன அல்லது மஞ்சுளாவை முடித்தாலென்ன?

கே: V. P. கணேசனைப்பற்றி ?

ப: துணிவும் விடா முயற்சியும் கொண்ட இளம் தயாரிப்பாளர்.

"அளவையூர் ஜெபம்"

அளவையூர்.

கே: நிறைவேருத ஆசைகள் மனதில் எழாமலிருக்க என்ன செய்யலாம்?

ப: நிறைவேற்றக்கூடிய ஆசைகளை மனதில் எழ மனதைப் பண்படுத்த வேண்டும்.

கே: தென்றல் குறுக்கெழுத்துப் போட்டிக்கு நாமும் பிரதி தயாரித்து அனுப்பலாமா?

ப: நிச்சயமாக அனுப்பலாம். தரமான எந்தவொரு ஆக்கத்திற்கும் தென்றலில் நிச்சயமான இடம் உண்டு.

R. சுவர்ணு
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

கே: M. G. R. மீண்டும் படங்களில் நடிப்பதைப்பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

ப: இரட்டை வேடம் போடுவது M. G. R. க்கு புதியது அல்லவே!

---

**விவாதமேடை:**

"இந்திய சஞ்சிகைகளின் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் ஈழத்து சஞ்சிகைகளின் நிலையும்" என்னும் தலைப்பில் வாசகர்களிடமிருந்து கருத்துகள் கோரப்படுகின்றன. தரமானவை தென்றலில் பிரசுரிக்கப்படும்.


*With Best Compliments*

M. G. M. Forage Stores
No. 781, K. K. S. Road,
JAFFNA.
*Phone: 611*

Mohamadia Grinding
Mills & Stores
777, K. K. S. Road,
JAFFNA.
*Phone: 611*

# சிரிப்புக்கும்! தொகுப்பு

**பெண்களுக்காக...**

**சுவையான கோப்பி தயாரிக்க?**

முதலில் கொதிதண்ணீரில் காப்பிப் பவுடரை போதிய அளவு போடவேண்டும். பாத்திரத்தை அப்படியே மீண்டும் ஒரு கொதி - அதாவது குமிழிகள் வரத்தொடங்க அடுப்பில் இருந்து இறக்கி 2 அல்லது 3 நிமிடங்களின் பின் காப்பியை வடித்து எடுக்கவேண்டும்! இப்படித் தயாரான காப்பிதான் மிகப் பிரமாதமாகவுள்ளது என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

**மனம்**

வளர்ந்தால் வாழ்வு!
தளர்ந்தால் தாழ்வு!

**எச்சரிக்கை!**

இதுவரை காலமும் மறைமுகமாக எச்சரிக்கப்பட்டு வந்த கூட்டணியினர் இப்போ J. R. ஜெயவர்த்தனவினால் நேரடியாக அமிர்தலிங்கமூடாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் மேடைதோறும் தனிநாடு; தனிநாடு என்று தாலாட்டுப் பாடியே தமிழ் மக்களைப் பராக்காட்டி வந்த கூட்டணி எம். பிக்கள் இனி என்ன செய்யப்போகின்றார்கள் என்பதை பொறுத்தே அவர்களின் எதிர்கால அரசியலும் அமையும் என்பதில் சந்தேகமில்லை. எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தொடர்ந்தும் அவர்கள் தனிநாட்டுப் பாட்டைப் பாடுவார்களாயின் பிழைப்பார்கள்! இல்லையேல்...?

**புதியதொரு விளக்கம்!**

W + I + F + E = Wife (மனைவி)

Wounderful Instrument For Enjoyment

**எதையும்**

எளிதாக ஏற்றால்
எப்போதும்
ஏமாற்றம் இருக்காது!

மாடு A:- வாறியா டவுணுக்குப் போவம்?

மாடு B:- ஏன் என்ன விடயம்?

மாடு A:- ஒரு புது ரியூட்டோரி திறந்திருக்காங்களாம்! நிறைய நோட்டீஸ் இருக்கும் தின்னலாம்.

மாடு B:- சரி! போகலாம் வா!

ஒருத்தி:- என்ன நீ இன்றைக்கு மேலே பிளவுசே போடாம வந்திருக்கே?

மற்றவ:- இந்த சாரிக்கு 'மெட்சா' ஒரு பிளவுசும் கிடைக்கலே. அதனாலேதான்....

ஒருத்தி:- ... ... ? ? ?

---

மாறும் சுவாத்தியம்

இப்போது உலகின் மேற்கு நாடுகளில் சீதோஷ்ண நிலையில் வெப்பம் அதிகமாகவும் கீழ் நாடுகளில் குளிர் அதிகமாகவும் மாறி வருவதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்களாம்!

---

அறுபத்தொன்றில் அறிஞர் அண்ணு!

கடிவாளம் இல்லை; குதிரை காடு மேடெல்லாம் பறக்கிறது! பலம் வாய்ந்த எதிர்க்கட்சி இல்லை; ஊரார் பணம் ஊதாரிச் செலவுக்குப் பாழாக்கப்படுகின்றது!

இரண்டாயிரம் என்ன – இருபதாயிரம் கோடி செலவானாலும் இப்படிப்பட்ட துரைத்தனம் நடத்துவோரின் தர்பாரில் நாடு தத்தளிக்கும்வரை விலைவாசி விஷம்போல் ஏறத்தான் செய்யும்!

---

புதிய வழி

கலங்களுக்குப் போதிய அளவு ஒட்சிசன் வாயு கிடைக்காவிட்டாலும் புற்றுநோய் தோன்றலாம் எனக் கண்டுபிடித்த அமெரிக்க வைத்திய நிபுணர்கள் X-Rays சக்தியுடன் அந்தக் கலங்களுக்கு நிறைந்தஅளவில் ஒட்சிசனைச் செலுத்திப் புற்றுநோயைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

---

நட்சத்திர நடிகர்:- நீங்கள் தயாரிக்கிற பிரமாண்டமான அந்தக் கூட்டுத் தயாரிப்பில் எனக்கு என்ன "கரெக்டர்" கொடுத்திருக்கிங்க?

தயாரிப்பாளர்:- கதாநாயகனுடைய வீட்டை கூட்டுற வேலையாள்.

---

இப்படியும் விளம்பரமா?

மக்கள் கேட்கின்றார்கள் !

பொது மேடைகளில் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் பேசும்போது அநேகமாக V. பொன்னம்பலம் அவர்களைப் பற்றியும் பாடுவார்கள். இதேபோல V. பொன்னம்பலம் அவர்கள்பேசும் போதும் அநேகமாக அமிர்தலிங்கத்தைப் பற்றி அளப்பார்! இப்படியே ஒருவர் மற்றவருக்கு விளம்பரம் தேடிக் கொடுக்கிறார்களா என்று பொது மக்கள் கேட்கிறார்கள், பதில் ?

## சிந்தனைக்கும்!

Best Compliments
Dealers in Textiles

V

# Sujatha Textiles

32, 3rd Cross Street,
COLOMBO - 11.
Tele No: 23215

# கலைப்பூங்கா



## நடிகர் - கதைவசனகர்த்தா

## கலைச்செல்வன்

இருபத்தைந்து வருடங்களாகக் கலைப்பணி ஆற்றி வருபவர் கலைஞர் கலைச்செல்வன். இன்று ஈழத்துச் சினிமாத்துறையில் புகழுடன் விளங்கும் கே. ஏ. ஜவாஹர், எஸ். என். கனரத்தினம் டீன்குமார் போன்ற பலரைத் தலைநகர் மேடையிலே அறிமுகப் படுத்திய பெருமையும் இவரையே சாரும். பல நாடகங்களில் நடித்தும், கதை - வசனம் எழுதியும், டைரக்ட் செய்தும் உள்ள இவரைத் தினகரன் பத்திரிகை 1969-ம் ஆண்டு ஈழத்தின் சிறந்த நாடக டைரக்டராகத் தெரிவு செய்து விருதுகள் வழங்கிக் கௌர வித்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது தென்னகத்தில் இருக்கும் நாடக சினிமா கலைஞ ரான திரு. எம். என். ராஜரத்தினம் பிள்ளையின் சிஷ்யர் இவர். தனது நடிப்பாலும் நாடகத்தாலும் ஈழத்துக் கலை அரசர் க. சொர்ணலிங்கம் அவர்களின் மனதில் ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டவர். ஒருமுறை யாழ் வீரசிங்கம் மண்டபத் தில் இவரது 'கொள்ளைக்காரன்' என்ற நாடகத்தைப் பார்த்து விட்டு, எனது 75 வருடகால கலை வாழ்வில் இப்படியான ஒரு நாடகத்தைப் பார்த்தில்லை என வாய்விட்டுப் பாராட்டினார் கலையரசு.

'நான் உங்கள் தோழன்' படத்தின் திரைக்கதை - வசன கர்த்தாவும், இந்தப்படத்தில் கதாநாயகி (சுபாஷினி)யின் தந்தை யாகவும் நடித்துப் பாராட்டுப்பெற்ற கலைச்செல்வன், தான் ஒரு திரைப்பட டைரக்டராக வருவதையே இலட்சியமாகக் கொண் டிருக்கிறார். அவரை சந்தித்து உரையாடியபோது, சுவாரஸ்ய மாகவும், அதே நேரத்தில் ஆழமான கருத்துக்களாகவும் அவர் அடக்கமாக வெளியிட்ட தகவல்களை முழுமையாகத் தரமுடியாது போனாலும், முக்கியமானவற்றை "தென்றல்" வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

---

கே. ஏ. ஜவாஹர், எஸ். என். தனரத்தினம், டீன்குமார் ஆகியோரின் பேட்டி அடுத்த இதழில் இடம்பெறும்.

---

உங்கள் இயற்பெயரே கலைச் செல்வன் தானா? அல்லது...?

பதில்:- பெயரில் என்ன இருகிறது? நமது தகுதியிலும் - திறமையிலும், நாம் சாதிப்பதிலும் தான் பேரும் புகழும் தங்கி இருக்கிறது.

'நான் உங்கள் தோழன்' படத்திற்கு கதை - வசனம் எழுதுவதற்கு மூன் வேறு ஏதாவது படத்திற்கு எழுதியுள்ளீர்களா?

பதில்:- காலஞ்சென்ற அறிஞர் அ. ந. கந்தசாமி, நடிகர் லடிஸ்வீர மணி ஆகியோருடன் சேர்ந்து சுமார் பத்து வருடங்களுக்கு முன்னால் 'ஆனந்தபைரவி' என்றபடத்தைத் தயாரிக்க முற்பட்டோம். இந்தப்படம் தான் நான் முதன் முதலாக கதை-வசனம் எழுதிய படம். சில பல காரணங்களால் இந்தப் படம் தடைப்பட்டதால், நான் உங்கள் தோழனே எனது முதல் படமாக அமைந்துவிட்டது. ஆனால் பல நாடகங்களுக்கு 15 வருடங்களுக்கு மேலாகக் கதை-வசனம் எழுதி இருக்கிறேன்.

நீங்கள் இப்பொழுது கதை-வசனம் எழுதிக்கொண்டிருக்கும் படங்கள் என்னென்ன? எந்தெந்தப் படங்களில் நடிக்கிறீர்கள்?

பதில்:- கணேஷ் பிலிம்ஸாரின் ''ஆத்மாவின் ராகங்கள்'', டைரக்டர் எஸ். வி. சந்திரனின் 'எங்களில் ஒருவன்', மனோபதி கம்பைன்ஸாரின் தயாரிப்பு இல்லை, பிரபல வர்த்தகர் ஜனுப் நளீம் தயாரிக்கும், ராஜபரம்பரை, ஸ்ரீ குமரன் பிலிம்ஸ் இளையராஜா, கொள்ளைக்காரன் ஆகிய படங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளேன். இதில் எத்தனை படங்கள் என்னை விட்டு போகின்றனவோ என்னால் சொல்லமுடியாது. ஏனென்றால் எங்கே, எப்படி, எவரை வெட்டுவது என்று கையில் சவர்க்காரத்துடன் நிற்கும் (வெ)க(ா)லைஞர்கள் உள்ள துறை தான் இந்த சினிமாத்துறை. இதுவரை நான் நடிப்பதற்கு முறையாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள படம் திருமதி மாலினிதேவி சோமசேகரம், திரு. 'லோட்' கந்தசாமி இருவரும் இணைந்து தயாரிக்கும் 'நெஞ்சுக்கு நீதி' என்ற படம் மட்டுமேயாகும்.

கலைச்சேவையில் எப்படி ஈடுபட்டீர்கள்? சுமார் எவ்வளவு காலம்?

பதில்:- அது தற்காலிகமாக ஏற்பட்ட விபத்து! இந்த விபத்தில் சிக்கிய காலத்தை கணக்கிட்டால் இப்போது வெள்ளிவிழா கொண்டாடலாம்.

இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பைப்பற்றி பலரும் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். உங்கள் கருத்தைச் சற்று விளக்கமாகச் சொல்கிறீர்களா?

பதில்:- இந்த சீசனில் கேட்கப்பட வேண்டிய, கேட்க அருமையான கேள்வி! 'நான் உங்கள்

தோழன்' படக்கலைஞர்களை பாராட்டுமுகமாக ஒரு விழா வொன்றினை கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத்தார் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் நானும், தயாரிப்பாளர் வி. பி. கணேஷன், திரு. சில்லையூர் செல்வராசன், நடிகர்கள் தனரத்தினம், ஜவாஹர் போன்றோர் பேசிய பேச்சுக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்நாட்டுத் தேசிய தினசரிகளான தினபதியும், வீரகேசரியும் முழுப்பக்க அளவில் செய்திகளாக பிரசுரித்தது.

இதைப் பொறுக்கமுடியாத கலையுலகின் அனுமதேயங்கள், அரிச்சுவடி தெரியாத அரை வேக்காடுகள், தமிழைச்சரியாக உச்சரிக்கத் தெரியாத 'சாணை' பிடிக்கவேண்டிய நாக்குடையவர்கள் எல்லாம் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டு குட்டை குழப்பப் பார்க்கிறார்கள். தேசிய உணர்வற்ற இந்த சில்லறைகள், எந்த எம். ஜி. ஆர் , சிவாஜி ரசிகர் கர்களால் எமது நான் உங்கள் தோழன் படம்ஓடியதோ, அந்த ரசிகர்கள் மத்தியில் எமக்கு ஒரு அபகீர்த்தியை உண்டுபண்ணுவதற்காகச்சிலவிஷமத்தனமான பிரச்சாரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை இது தான்!

கூட்டுத்தயாரிப்பு என்று வரும்போது நம் நாட்டுக் கலைஞர்களுக்கும் சமமான அல்லது மூன்றில் ஒரு பங்காக வாவது வாய்ப்பு இருத்தல் வேண்டும். அதைவிட்டுவிட்டு ஆணி அடிப்பதற்குக்கூட இந்தியாவில் இருந்து ஆள் கொண்டு வருவதாக இருந்தால், 'இரு நாடுகளுக்கும் கலைப்பாலம் அமைப்போம்' என பம்மாத்துக் காட்டிக்கொண்டு எம்மை மட்டம்தட்டும் முயற்சியாகும். தென்னிந்திய திரைப்படங்களின் பெரிய சந்தையாக விளங்கும் ஈழத்தில் நான் உங்கள் தோழன் போன்று வருடத்தில்பத்துப்படங்கள் தயாரானால் தமிழ்நாட்டுக்குப்பொருளாதார அடிப்படையில் மட்டுமின்றி, சிங்கப்பூர், மலேசியா, பிஜித்தீவுகள், தென் ஆபிரிக்கா சந்தையிலும் நம்மவர்கள் இடம் பிடித்து விடுவார்கள் என்ற பயமே கூட்டுத்தயாரிப்பு என்ற பெயரில் உருவாகியுள்ள கூட்டுச் சதியாகும். இந்தச் சதிக்கு காரணகர்த்தாக்கள் நம் நாட்டில் பணமுதலீடு செய்யும் தயாரிப்பாளர்கள்தான். எமது போராட்டம் எமது நல உரிமைகளைக் காக்கும் போராட்டமேதவிர, மதிப்பிற்குரிய நடிகர் சிவாஜிகணேஷனுக்கோ, பைலட்பிரேம்நாத்துக்கோ எதிரிடையானது அல்ல என்பதை அன்பு ரசிகப்பெருமக்களுக்குத் தெட்டத்தெளிவாகத்தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழத்துத் தமிழ்ப்பட வரலாற்றில் சாதனையை ஏற்படுத்திய புதிய காற்று, கோமாளிகள், நான்

உங்கள் தோழன் போன்றவற்றின் வெற்றியின் அடிப்படைக் காரணங்களைக் கூற முடியுமா?

பதில்:- ஒன்று நமது ரசிகப்பெருமக்கள் வெறும் சினிமா ரசனையில் ஊறியவர்கள் மட்டுமல்ல. தேசிய உணர்வு நிரம்பப் பெற்றவர்கள் என்பதன் எடுத்துக்காட்டு. மற்றது எமது நாட்டிலும் திறமைமிக்க கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதன் பிரதிபலிப்பு!

கலையுலகில் ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவத்தைக் கூறுவீர்களா?

பதில்: கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கலாசாரப் பேரவைக்கு எதிராக எனது அகில இலங்கை தமிழ் நடிகர் சங்க அங்கத்தவர்கள் செய்த போராட்டத்தில், நடிக நண்பர்கள் எம். எம். லத்தீப், சோமசுந்தரம் ஆகியோரோடு என்னையும் சேர்த்து போலிஸார் கைது செய்து, நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டோம். பின் விடுதலையானோம். போராட்டத்திலும் வெற்றி பெற்றோம். இதுவே என் வாழ்வின் மறக்க முடியாத சம்பவம்.

நல்ல கலைஞர்களை தயாரிப்பாளர்கள் இனங் கண்டு கொள்ள வேண்டுமெனச் சிலர் கூறுகிறார்களே! அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்:- இனங்கண்டுகொண்டுள்ளதால்தான், குத்துவிளக்கிலிருந்து, நான் உங்கள் தோழன் வரை நமது தயாரிப்புகள் வருவில் சாதனையை ஏற்படுத்தி வருகிறது. நிறை குடங்கள் தளம்புவதில்லை. ஆனால் கலைஞர் கருணாநிதி கூறியதுபோல் நாய்க்குத் தங்கத்தால் நாக்கு செய்துபோட்டாலும் அது குரைத்துக் கொண்டுதான் இருக்கும். அதுகளைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் இலைமறைகாய்களாக இருக்கும் திறமைசாலிகளை முன்னுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்தல் அவசியம்.

இந்தியப் பத்திரிகைகளின் ஆக்கிரமிப்பால் ஈழத்து பத்திரிகைகளின் நிலையைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- எப்படித் தென்னிந்தியத் திரைப்படங்களின் தாக்கத்தால் இதுவரை, அதாவது திரைப்படக் கூட்டுத்தாபனம் என்ற ஒன்று உருவாகும்வரை நம் நாட்டுக் கலைஞர்கள் நசுக்கப்பட்டார்களோ அதே போன்ற நிலையே நமது பத்திரிகையாளர்களும் சஞ்சிகையாளர்களும் அடைந்துள்ளார்கள். இதைத்தடுப்பதற்கு பத்திரிகைக் கூட்டுத்தாபனம் (கடதாசிக் கூட்டுத்தாபனம் அல்ல) ஒன்று உருவாக்கவேண்டும், அல்லது அவைகளை கட்டுப்படுத்த வேண்டும், என்று கலை இலக்கிய நண்பர்கள் சார்பில் மாண்புமிகு பிரதமர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

எமது தென்றல் பத்திரிகைக்கும், எமது வாசகர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்:- 'புதியகாற்று' திரைப்பட உலகில் எப்படி ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதோ, அதேபோல் 'தென்றலு'ம் சஞ்சிகைத்துறையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு வாசகர்களும் பக்கபலமாக அமையவேண்டும். ஈழத்துக் கலைஞர்களுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதோ, அதற்கும் மேலாக நமது ரசிகர்களும் - வாசகர்களும் தென்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதே என் அவா. நன்றி.

வணக்கம்.

பேட்டிகண்டவர்:- எஸ். அரதராஜா

முகவரி:-

KALAICHELVAN,
72/11, HULTSDORF STREET,
COLOMBO - 12


# THURAI R. G. Buildings

66, Stanley Road, JAFFNA.

*T' Phone: 7750*

Auto Spares Consultants & Pioneers in

TRANSPORT SERVICE

For Security and Care Entrust your Bag and Baggage to:

"RAJAKUMAR TRANSPORT"

83/2, Point Pedro Road, Anaipanthy,

JAFFNA.

*T' Phone: 7565*

நிலக்கண்ணாடி

# மத்திய கிழக்குப் பிரச்சனை

உலக சமாதானத்திற்கு மத்திய கிழக்குப் பிரச்சனை பங்கம் விளைவிப்பதாகவே இருக்கின்றது. மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டக் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தும், இஸ்ரெயில் பிரதமர் பேகினும், அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டரும் எடுத்து வரும் முயற்சி வெற்றி காண்பதாக இல்லை. நிலையான சமாதானம் எகிப்திய, இஸ்ரெயில் தலைவர்களின் சந்திப்பால் ஏற்படலாமென எல்லோரும் எதிர்பார்த்த பொழுது பலஸ்தீன கொமாண்டக்கள் இஸ்ரவெயிலுக்குள் சென்று இஸ்ரவெயிலின் உல்லாச பிரயாணிகளைத் தாக்கியது நிலைமையை மோசமடையச் செய்துள்ளது. தனது யூத மக்கள் கொல்லப்பட்டதிற்குப் பழிக்குப்பழி வாங்க இஸ்ரவெயில் தயங்கவில்லை. பலஸ்தீனர்களின் புகலிடமாகவுள்ள தென் லெபனானுள் ஊடுருவிப் பலத்த சேதத்தை விளைவித்ததுடன் அந்நாட்டின் 10 கிலோ பிரதேசத்தையும் தன் ஆதிக்கத்துள்ளாக்கியது. தற்பொழுது ஐ. நா. ஸ்தாபனம் தனது படையை அங்கு அனுப்பி சமாதானத்தை நிலை நாட்டியுள்ளது.

ஆறு மில்லியன் யூத மக்களை நாசிகளின் இனவெறிக்குப் பலி கொடுத்தபின் 1948 ல் இஸ்ரெயில் ராச்சியம் யூதர்களுக்கென உருவாக்கப்பட்டது. இந்த இஸ்ரெயில் நாடு நிறுவப்பட்டு 30 ஆண்டுகள் அண்மையில் முடிவுற்றுள்ளது. அந்த 30 ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடச் சென்றுள்ள பெகின் தமக்கு அளித்த விருந்துபசார வைபவத்தில் இஸ்ரெயில் மேற்கு ஜோர்டான், காஷா பிரதேசத்திலிருந்து ஒரு பொழுதும் வெளியேற மாட்டாது என ஆணித்தரமாகக் கூறியுள்ளது, எகிப்தும் மற்றைய அரபு நாடுகளும் இஸ்ரெயில் மேற்கு ஜோர்டான் பிரதேசத்திலும், 1967ம் ஆண்டிலிடம் பெற்ற ஆறு நாள் யுத்தத்தில் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்தும் வெளியேறி சுதந்திர பலஸ்தீன இராச்சியத்திற்கும் அங்கீகாரம் கொடுத்தல் வேண்டுமென வலியுறுத்துகின்றன. சுதந்திர பலஸ்தீனம் உருவாக வேண்டுமென அநேக உலக நாடுகளும் விரும்புகின்றன. எனவே இஸ்ரெயில் தனது கொள்கையை மாற்ற வேண்டும் அது தனது கொள்கையை மாற்றுவதிலேயே உலக சமாதானம் தங்கியுள்ளது.

### பலஸ்தீனப் பிரச்சனை:

இன்றைய உலகத்தின் கவனத்தை அதிகம் ஈர்க்கும் பிரச்சினை பலஸ்தீனப் பிரச்சினையாகும். பலஸ்தீனப் பிரச்சினை என்றால் என்ன?

தாம்வாழ ஒரு சுதந்திர தனி நாடு வேண்டுமென வாதாடும் 3·5 மில்லியன் பலஸ்தீன மக்களின் பிரச்சினையே பலஸ்தீனப் பிரச்சினையாகும். இன்று மத்திய கிழக்கிலும் மற்றைய நாடுகளிலும் இந்த 3·5 மில்லியன் மக்களும் சிதறிக் கிடக்கின்றனர். இவர்களில் அநேகர் அரபு முஸ்லீம்களாவார். இவர்களில் கிறிஸ்தவர்களும் காணப்படுகின்றனர். இவர்கள் இன்றுள்ள இஸ்ரெயில் நாடு, ஜோடான் பிரதேசம் காஷா பகுதி என்பன தமக்குச் சொந்தமான பலஸ்தீன ராச்சியமாக விளங்கியது என வாதாடுகின்றனர். சுதந்திர பலஸ்தீனத்தை மேற்கு ஜோர்டான், காஷா பிரதேசத்தில் உருவாக்குவதே இவர்களின் இலட்சியமாகும். இதன் நோக்கமாகவே 1967 ல் பலஸ்தீன விடுதலை இயக்கம் எகிப்தும், மற்றைய அரபு நாடுகளின் அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்டது.

நாடற்றவர்களாக இன்று பலவித பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டு வரும் இந்த பலஸ்தீனர்களில் பெரும்பான்மையோர் நல்ல கல்வியறிவுள்ளவர்களாகவும், அரபு உலகில் நல்ல உயரிய பதவிகளை வகிப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். ஜோர்தானின் பொருளாதாரம் இவர்கள் கையிலேயேயிருக்கின்றது. இவர்களில் பெரும்பான்மையோர் சிரியாவிலும், குவைத்திலும், ஜோர்டான் கிழக்குப் பிரதேசங்களிலும் வாழ்கின்றனர். இவர்களிலும் பார்க்க மேற்கு ஜோர்டானில் வாழ்கின்ற பலஸ்தீனர்களே இஸ்ரெயிலின் ஆதிக்கத்திற்கு மூற்றுப்புள்ளி வைக்க பெரிதும் முயல்கின்றனர். பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபெற் மேற்கு ஜோர்டான் காஷா பிரதேசத்தில் ஒரு சுதந்திர பலஸ்தீனத்தை உருவாக்கி, மற்றைய பலஸ்தீனர்களை அங்கு குடியேறச் செய்யலாம் எனக் கருதுகின்றார். இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதை எதிர்காலம் தான் கூறமுடியும். இஸ்ரெயில் ஜோர்டான் காஷா பிரதேசத்தை விட்டுக் கொடுக்குமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

## ஆப்கானிஸ்தான்:

ஆசியாவில் நல்ல கேந்திர ஸ்தானத்திலிருக்கும் ஆப்கானிஸ்தானில் மார்ச் 27-ந் திகதி ராணுவப் புரட்சி அப்துல் கஷிர் தலைமையில் ஏற்பட்டுள்ளது.

“துவக்கைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவன் அந்தத் துவக்கினாலேயே தனது முடிவை” எய்துவான் என்ற கூற்றுக்கிணங்க யூலை 1973-ல் தனது மைத்துனரான மன்னர் முகம்மது ஷாகிர் ஷாவின் 40 வருடகாலஆட்சியைக் கவிழ்த்து, பதவி ஏற்ற முகம்மது தாவுட் ராணுவப் புரட்சியாளரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

முகம்மது தாவுட்டும் அவரின் இளைய சகோதரர் நசீமும் புரட்சியாளர்களை எதிர்த்துப் போராடியே மரணம் அடைந்தனரெனச் சொல்லப்படுகின்றது. தாவூத்தின் குடும்பத்தினர்களில் சிலர் பிரெஞ்சு தூதரகத்தில் அடைக்கலம் புகுந்து உயிர் தப்பியுள்ளார்கள்.

யூலை 1973-ல் ஆட்சியை பெற்ற தாவூத் ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தத் தவறினர். தன்னை ஒரு சோஷலிசவாதியென்று சொல்லிக்கொண்ட தாவூத் ஒரு சர்வாதிகாரியாக விளங்கினர். மேலும் ஆப்கனிஸ்தான் அமெரிக்கா ருஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்து பல உதவிகளைப் பெற்றும் ஒரு சிறிதும் முன்னேறவில்லை. இங்கு புகையிரதம் இல்லையாகும். இங்குள்ள 19.5 மில்லியன் மக்களில் 10 வீதமானேரே கல்வியறிவுடையவர்கள். ஒருவனின் ஆயுட்காலம் சராசரி 40 வருடமாகும். சிசு மரண வீதம் இங்கு மிக அதிகமாகும். இப்படியான நிலையிலுள்ள ஆப்கனிஸ்தானின் ஜனாதிபதியாகவும், பிரதம மந்திரியாகவும், புரட்சியாளரால் நியமிக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்கட்சியின் காரியதரிசியான நூர் முஹம்மது தாராகிக்கு, பெரும்பணி காத்திருக்கின்றது. ஆப்கனிஸ்தானின் புதிய ஆட்சிக்கு ருஷ்யாவின் ஆதரவு உண்டு.

பாகிஸ்தான்:

பாகிஸ்தானின் முன்னை நாள் பிரதமர் அலி சுல்பிகார் பூட்டோவுக்கு ஜியா உல் ஹக்கின் தலைமையிலான ராணுவ அரசாங்கம் மரண தண்டனை விதித்துள்ளது.

1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி அஷ்மத் ரஸாகசூரி என்ற தேசிய பேரவை அங்கத்தவரின் தந்தையை, கிழக்குப் பாகிஸ்தான் விவகாரத்தில் ஏற்பட்ட பகைமை காரணத்தால் பூட்டோ கொலை செய்தார் என்பதே அவரின் மீதான குற்றமாகும். பாகிஸ்தானை புனிதப்படுத்துவதில் ஈடுபட்டு மூன்றும் நூற்றுண்டுக்கால தண்டனைகளையெல்லாம் தமது ஆட்சியில் குற்றம் செய்பவர்களுக்கு அளித்து வரும் ஜியா உல் ஹக், பூட்டோவிற்கும் மரண தண்டனை அளிக்கவே விரும்புகின்ருர். பல அரபு நாடுகள் அலிபூட்டோவிற்கு காருண்யம் காட்டும்படி அவரை மன்ருட்டமாகக் கேட்கின்றன. மேலும் கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட பூட்டோவிற்கு பாகிஸ்தானில் நல்ல செல்வாக்கும் அனுதாபமும் இருக்கவே செய்கின்றது.

அலி பூட்டோவின் உயிர் ஜெனரல் ஹியா உல் ஹக்கின் கையில் தான் இருக்கின்றது. அவர் நினைத்தால் பூட்டோ உயிர் வாழலாம்.

பயங்கரவாதம்:

மத்திய கிழக்குப் பிரச்சினை ஒரு பக்கம் இருக்க, இன்று உலகெங்கும் பயங்கரவாதம் புதிய உருவில் தலைதூக்கியுள்ளது. ''செங் கொரிலாக்கள்'' எனத் தம்மை அழைக்கும் குழுவினர் ஜனநாயக அரசுகளுக்கு சவால் விடுவனவாக விளங்குகின்றன. விமானங்களைக் கடத்தல், அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுதல், பிரமுகர்களைக் கடத்தல், அவர்களை பணயமாக வைத்து தமது குழுவினர்களை சிறையிலிருந்து விடுவித்தல் ஆகிய செயல்களில் இக் கொரில்லாக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் இந்தக் கொடூரமான செயல்களும், அதற்குப் பலி

யானவர்களின் எண்ணிக்கைகளும் நாளுக்கு நாள், நாட்டுக்கு நாடு அதிகரிக்கின்றது.

மேற்கு ஜேர்மனியின் தொழில் அதிபர் ஹன்னஸ் மாட்டின் ஷெலியர் (*Hannas Martyn Schelyer*) பயங்கர வாதிகளால் கொல்லப்பட்டார். ஏப்பிரல் 9-ந் திகதி செவ்வாயன்று முன்னை நாள் இத்தாலியப் பிரதமர் அல்டோ மோரோ இத்தாலிய செங் கொரிலாக்களால் படுகொலை செய்யப்பட்டார். சிறையில் வாழும் தமது 13 கொரில்லாக்களை விடுதலை செய்யும் பட்சத்தில் அல்டோ மொரோ விடுதலை செய்யப்படுவார் என்ற கொரில்லாக்களின் கோரிக்கை 56 நாட்களாக இத்தாலிய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டமையே அல்டோ மோரோவின் கொலைக்குக் காரணமாகும்.

இவ்வாறு கொரில்லாக்களின் பயங்கரவாதம் எல்லா நாடுகளிலும் அமைதியான வாழ்விற்குப் பங்கம் விளைவிப்பதாக இருக்கின்றது. இப் பயங்கரவாத இயக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இன்றேல் தனி மனிதன் சுதந்திரத்துடன் வாழமுடியாத நிலை ஏற்படும்.

With the Best Compliments of

**GANESHANANDA STORES**

244, (462) Hospital Road, JAFFNA.

*Dealers in:*

Timber, Household Utensils, Tiles Furniture & Lorry Transport.

*T' Phone: 427*

Prop: V. Sundarampillai

என்றுளும் தென்றல் மணம் கமழ
எங்கள் நல்லாசிகள்.

யாழ் நகரில்

சி. கே. பி. டெக்ஸ்டைல்

நங்கையர் விரும்பும் நவநாகரீக ஆடைகளையும் ஆடவர்களுக்கு, சிறுவர்களுக்கு ஏற்ற ரெடிமேட் ஆடைகளையும் நிதான விலையில் மலிவாகப் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

(சலுசலா புடவை விநியோகஸ்தர்கள்)

# சி. கே. பி.
# டெக்ஸ்டைல்

74, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

அழகிய தங்க வைர
நகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

## Yappan Jewellers

Jaffna. *Phone: 518*

# BENTLY OVENS

FOR

# Better Baking

★

43, Mohamed Ismail
1st Cross Street,
COLOMBO - 11

With Best Compliments from

# Yarl Motor Stores

Dealers in Motor Spares & Accessories

Phone: 7752
Grams: 'YALMOTO'

108/3, Stanley Road,
Jaffna.


எந்நாளும் 'தென்றல்' சுகந்தம் தவழ
எங்கள் நல்லாசிகள்

# செல்லப்பா அன் கோ

Dealers in Motor Spares

போன்: 7022

4/1, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.




மண்ணெண்ணெய் அடுப்புக்கள், காஸ் அடுப்புகள்
மின்சார அடுப்புகள், மணிக்கூடுகள், சுடு தண்
ணீர்ப் போத்தல்கள், விளையாட்டுச் சாமான்
கள் போன்றவற்றிற்கும், சாப்புச்
சாமான்கள், பாட்டா காலணி
களுக்கும், மற்றும் இதர
சாமான்களுக்கும்,

தேவையான அளவிலும் தரமான விலையிலும் மொத்த
மாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக்கூடி
யதோர் அரிய ஸ்தாபனம்,

**சி. சின்னத்துரை அன் பிரதர்ஸ்**

39, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.